# அரங்கம் செய்திகள்

தமிழ் மக்களுக்கான ஒரு தொடர்பூடகம்

வார இதழ் – இலவசம்

வெள்ளி, ஆகஸ்ட் 23 இதழ் - 76









உயர் நியமனங்களில் அதிக கவனம் தேவை அவை ஒட்டுமொத்த இலங்கைக்கே பாதகமாக அமையலாம்

பக்கம் - 03



பிறந்த நாள் கொண்டாட்டமும் பிள்ளையானின் விடுதலையும்

பக்கம் - 04



ஸ்றைலு ஸ்றைலு தான்

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு பஸ்சில் ...

பக்கம் -10




லெமூரியா குமரிக்கண்டம் என்பது ஒரு கற்பனை

பக்கம் -12



## ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்க முன் ரணில் வழங்கும் விருந்துபசாரம் -சஜித் பங்கொள்ளமாட்டார்

நி.அமிர்தஸன் ---

ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கத் தான் தயாராக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய அரசியல் அணியை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் அதனைச் செயற்படுத்த முன்வருமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆனால் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்று அறிவிக்காமல் புதிய அரசியல் அணியை உருவாக்க முடியாதென கட்சியின் பிரதித் தலைவர், அமைச்சர் சஜித் பிரேமதாச கூறியுள்ளார்.

இந்த நிலையில் வெள்ளிக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ரணில் விக்கிரமசிங்க சந்திக்கவுள்ளார்.

அரசாங்கம் அமைக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளதால் சிறப்பு விருந்துபசாரம் ஒன்றை வெள்ளிக்கிழமை இரவு ஏற்பாடு செய்துள்ளதாகவும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

எனினும் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்க முன்னர் ரணில் விக்கிரமசிங்க நடாத்தும் இந்த விருந்துபசாரத்தில் கலந்துகொள்ள முடியாதென சஜித் பிரேமதாச கட்சியின் மூத்த உறுப்பினர்களிடம் கூறியுள்ளார்.

அதேவேளை, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, கரு ஜயசூரிய, சரத் பொன்சேகா ஆகிய நான்கு பேரும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தயாராக இருப்பதாகவும் இந்த நான்கு பேரில் ஒருவரை கட்சியின் மத்திய குழு விரைவில் அறிவிக்கும் என்றும் கட்சி உறுப்பினர் போராசிரியர் ஆசுமாரசிங்க கொழும்பில் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.

தமிழ் முஸ்லிம் மக்களின் வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே கிடைக்கும் என்று கட்சியின் மூத்த உறுப்பினர்கள் நம்புவதாகவும் பேராசிரியர் ஆசுமாரசிங்க

தொடர்ச்சி பக்கம்...15

## முக்கிய வழக்குகளின் அறிக்கை சட்ட மா அதிபரிடம்



ரக்பி வீரர் வசீம் தாஜூதீன், செய்தியாளர் லசந்த விக்ரமதுங்க மற்றும் நான்கு வழக்குகள் தொடர்பான விசாரணை அறிக்கை, பதில் பொலிஸ் மா அதிபரால் சட்டமா அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
வசீம் தாஜூதீன் கொலை, லசந்த விக்ரமதுங்க கொலை உள்ளிட்ட 6 சம்பவங்கள் தொடர்பான விசாரணை அறிக்கையை, வெவ்வேறு கோப்புகளாக தயாரித்து வெள்ளிக்கிழமைக்கு(23) முன்னதாக சமர்பிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு ஏற்கனவே அறிவித்திருந்தார்.

வசீம் தாஜூதீன் கொலை, லசந்த விக்ரமதுங்க கொலை, கீத் நொயார் கடத்தல், 17 பணியாளர்கள் கொலை மற்றும் 11 இளைஞர்கள் கடத்தி செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை ஆகிய சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துமாறு சட்டமா அதிபரினால் கடந்த 15 ஆம்

தொடர்ச்சி பக்கம்..15

## கொழும்பில் படகுச் சேவை



கொழும்பு வாகன நெரிசலை குறைக்கும் மற்றுமொரு முயற்சியாக பயணிகளின் போக்குவரத்துக்கான படகு சேவை ஒன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டவிருந்தது.

யூனியன் பிளேஸில் இருந்து கொழும்பு கோட்டை வரையில் பேரவாவியின் ஊடாக இந்த படகு சேவை நடைபெறும். இரவு நேரங்களிலும் படகு மூலம் சுற்றுலாவை மேற்கொள்ள வசதி மேற்கொள்ளப்படும்.

பெருநகர மற்றும் மேல் மாகாண அமைச்சுக்குட்பட்ட இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் இதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது. இதில் பயணிகள் போக்குவரத்துக்கான குளிரூட்டப்பட்ட படகு பயன்படுத்தப்படுவதாக தலைவர் ரொசான் குணவர்த்தண தெரிவித்தார்.

ஜூனியன் பிளேசில் இருந்து கொழும்பு கோட்டை வரையில் பஸ்ஸில் செல்வதற்கு அலுவலக நேரங்களில் பொதுவாக 30 நிமிடங்கள் செல்லும், இப்பினும் பேர வாவியின் ஊடகான படகின் மூலம் பயணத்தை மேற்கொள்ளும் போது 10 நிமிடங்கள் மாத்திரமே ஆகும் என்று காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தில் காணப்படும் முன்னேற்றத்தின் அடிப்படையில் படகின் மூலமான பயணிகள் போக்குவரத்து சேவையை மேலும் விரிவுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி பக்கம்..15

## புதிய இராணுவத் தளபதி பதவியேற்பு



இலங்கை இராணுவத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட 23 ஆவது இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா அவர்களுக்கு ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி வழங்கப்பட்ட சிகப்பு கம்பள, இராணுவ சம்பிரதாய மரியாதைகளை அடுத்து, அவர் தனது புதிய பதவியை ஏற்றார்.

முதல் தடைவையாக இலங்கை கஜபா படையணியைச் சேர்ந்த ஒருவர் இராணுவத் தளபதி நியமிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இராணுவத் தலைமையகத்திற்கு வருகை தந்த புதிய இராணுவ தளபதியை இராணுவ தலைமையக பட்டாலியன் தலைமையகத்தின் கட்டளை அதிகாரி வரவேற்று பின்னர் கஜபா படையணியினால் இராணுவ சம்பிரதாய முறைப்படி அணிவகுப்பு மரியாதைகள் வழங்கி அவர் வரவேற்கப்பட்டார்.

அத்துடன், “உலகின் எந்தவொரு இராணுவமும் நாட்டின் குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், ஜனநாயக வாழ்க்கை முறைக்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதற்கும் தன்னை அர்ப்பணித்துள்ளது. கடந்தகால மனிதாபிமான நடவடிக்கைகளின் போது, நாங்கள் அந்த வழிகாட்டுதல்களைக் கடைப்பிடித்தோம், எந்தவொரு நாட்டிலும் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறு சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் உரிமைகளுக்கு ஏற்ப நாம் செயல்பட்டோம்” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## சஹ்ரானுடன் தொடர்பு : மேலும் ஒருவர் கைது

அம்பாறையில் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் செயற்பாட்டு உறுப்பினர்களில் ஒருவராக செயற்பட்ட ஜமாத்தே மில்லதே ஈப்ராஹீம் அமைப்பின் உறுப்பினர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நுவரெலியாவில் சஹ்ரானுடன் ஆயுத பயிற்சிப் பெற்றுள்ளதாக அரச புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

‘அபு இக்ரிமா’ எனப்படும் மொஹமட் ரஃபைடீன் மொஹமட் அலி என்ற இந்தச் சந்தேகநபர் வடதெனிய, வெலங்பொட, கம்பளை பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

அம்பாறை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவல்களுக்கு அமைவாக இதுவரை 16 பேர் அம்பாறை பிரிவின் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜனாதிபதி விருதுச் சான்றிதழ் பெறுகிறார் சகா (நமது நிருபர் )



இலங்கையின் முதலாவது ஜனாதிபதி ஊடக விருதுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று(23) வெள்ளிக்கிழமை கொழும்பு ஊடக அமைச்சில் நடைபெறவுள்ளது.

ஊடக அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, 2018 ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி ஊடக விருதுக்காக நியமனம் செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர்களுக்கு வழங்கி வைக்கவுள்ளார்.
இலங்கையின் முதலாவது ஜனாதிபதி ஊடகவிருது விழாவில் 2018ஆம் ஆண்டுக்கான இலங்கை தமிழ்ப் பத்திரிகைத் துறையில் அதிசிறந்த செய்தி அறிக்கையிடலுக்கான ஜனாதிபதி விருதுக்கு மூவர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

சிரேஸ்ட ஊடகவியலாளர்களான லோறன்ஸ் செல்வநாயகம்(தினகரன்), தம்பிராஜா சகாதேவராஜா(வீரகேசரி தினகரன்), சுப்பிரமணியம் நிசாந்தன் (சுடர்ஒளி) ஆகியோரே விருதுக்காக தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இவர்களில் லோறன்ஸ் செல்வநாயகத்திற்கு விருது வழங்கப்பட்டிருந்தது.
இவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று நடைபெறுகிறது.

## சிரேஸ்ட பிரஜைகள் சங்கப் பொதுக்கூட்டம்

(மட் / திருவரங்கன்)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு கோட்டைமுனை கிராம சேவையாளர் பிரிவு சிரேஸ்ட பிரஜைகள் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 31.08.2019 மாலை 5.00 மணியளவில் பொற்கொல்லர் வீதியில் அமைந்துள்ள விஸ்வகர்ம கலாசார மணடபத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் பொதுக்குழு அங்கத்தவர்களுக்கு சங்கம் இதுவரை மேற்கொண்டிருக்கும் செயல்பாடுகள் பற்றி தெரிவிக்கப்படும். அவைகளில் முக்கியமானவை.

01.வீடமைப்பு அமைச்சர் கௌரவ சஜித் பிரேமதாஸவிடம் நேரடியாக கையளிக்கப்பட்ட கோரிக்கை மகஜர் பற்றியும்.
02.மட்டக்களப்பு பாராளுமன்ற பிரதிநிதி ஜீ.ஸ்ரீநேசன் அவர்கள் சங்கத்துக்கு ஒதுக்கீடு செய்துள்ள உபகரண கொடுப்பனவு பற்றியும்.
03.மட்டக்களப்பு பாராளுமன்ற பிரதிநிதி எஸ்.வியாழேந்திரனிடம் அண்மையில் சங்க நிர்வாகிகள் சமர்ப்பித்த கோரிக்கையும் உரையாடியமை பற்றியும் தெளிவு படுத்தலும் நடைபெற இருக்கிறது.

## அம்பாறை மாணிக்கப்பிள்ளையாரின் வருடாந்த மஹோற்சவம்!



(காரைதீவு நிருபர் சகா)

அம்பாறை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து ஒன்பது தினங்கள் திருவிழாக்கள் நடைபெற்று செப்.2 ஆம் திகதியன்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையும்.
சகல திருவிழாப்பூஜைகளும் காலை 9.30 மணிக்கும் மாலை 5மணிக்கும் ஆரம்பமாகும்.

ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ. க.கு. நகுலேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த பல தமிழ்க்கிராமங்கள் இணைந்து திருவிழாக்களை நடாத்துகின்றன.
கல்லோயா குடியேற்றத்திட்டகாலத்தில் அம்பாறை நகரில் அமைக்கப்பட்ட இவ்வாலயம் தற்போது சிங்கள பௌத்த மக்களால் மட்டும் நிரம்பப்பெற்ற சூழலில் சிறப்பாக பரிபாலிக்கப்பட்டுவருவதும் சிங்கள பௌத்தமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கிவருவதும் தெரிந்ததே.

## அம்கோர் திட்டம் குறித்த கலந்துரையாடல்



அம்கோர் நிறுவனத்தினால் அவுஸ்திரேலிய உயர்தானிகராலயத்தின் நிதி அனுசரணையில் கடந்த காலங்களில் அமுல்படுத்தப்பட்ட திட்டங்கள் மற்றும் 2019 ஆண்டிற்கான புதிய திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடல் ஒன்று வியாழனன்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் தெற்காசியபிராந்தியத்திற்கான உதவிப் பணிப்பாளர் திரு வென் ரீவிஸ், உயர்ஸ்தானிகராலயத்தின் ஆலோசகரான திரு. கன் சோவைட், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மா. உதயகுமார், மாவட்டதிட்டமிடல் பணிப்பாளர் திருமதி ச. புண்ணிமூர்த்தி மற்றும் அம்கோர் நிறுவனத்தின்பணிப்பாளர் திரு. ப. முரளிதரன், நிகழ்ச்சி திட்ட முகாமையாளர் திரு. யோ. சிவயோகராஜன் வெளிக்கள அலுவலர் திருமதி கி. உதயராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் 2015/2018 காலப்பகுதியில் முறையற்ற விதமாக புலம்பெயர்பவர்களை கட்டுப்படுத்துவதற்காக மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஊடாக பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தல் போன்ற அம்கோரின் திட்டங்கள் குறித்து ஆராயப்பட்டது.

## காரைதீவு வெருகலம்பதி பாதயாத்திரை ஆரம்பம்!



(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்திபெற்ற வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தையொட்டி காரைதீவிலிருந்து இன்று 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை பாதயாத்திரை ஆரம்பமாகின்றது. காரைதீவு கதிர்காம நந்தவன பாதயாத்திரைச்சங்கம் இதனை ஏற்பாடுசெய்துள்ளது.

கதிர்காம பாதயாத்திரைக்குழுத் தலைவர் வேல்சாமி மகேஸ்வரன் தலைமைதாங்கும் இப்பாதயாத்திரை 10 தினங்கள் அம்பாறை மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியால் பயணித்து செப்ரம்பர் மாதம் 1ஆம் திகதி வெருகலைச் சென்றடைய விருக்கிறது.

வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் செப்.1ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்று வெள்ளிக்கிழமை அதிகாலை காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் ஆரம்பமாகும் இப்பாதயாத்திரை பெரிய கல்லாறு, தேற்றாத்தீவு, ஆரையம்பதி, ஊறணி, வந்தாறுமூலை, சித்தாண்டி, வாழைச்சேனை, பனிச்சங்கேணி, புச்சாக்கேணி ஆகிய இடங்களில் தரித்துநின்று 10ஆம் நாளான செப்.1ஆம் திகதி அதிகாலை வெருகலைச்சென்றடையுமென சங்கப்பொருளாளர் எஸ்.தேவதாசன் தெரிவித்தார்.

# உயர் நியமனங்களில் அதிக கவனம் தேவை அவை ஒட்டுமொத்த இலங்கைக்கே பாதகமாக அமையலாம்



இலங்கையின் புதிய இராணுவத்தளபதியாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பெரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பல தரப்பாலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள இவரை இராணுவத் தளபதியாக நியமித்ததை இலங்கையில் உள்ள குறைந்தபட்சம் தமிழ் சிறுபான்மை மக்களும் மனித உரிமைச் செயற்பாட்டாலர்களும் சர்வதேச சமூகமும் எதிர்த்துள்ளனர்.

மறுபுறம் சிங்கள தேசியவாதிகள் பொதுவாக அவரது நியமனத்தை வரவேற்றுள்ளனர். யுத்தத்தை வென்று தந்தவர் என்பது அவர்களது கருத்து.

ஒரு சிறிய அரச நியமனத்துக்கே பல விதமான ஒழுங்குவிதிகளைப் பின்பற்றும் ஒரு அரசாங்கம், ஐநா உட்பட சர்வதேச மட்டத்தில் பல விதமான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கும் ஒருவருக்கு ஒரு பதவியைக் கொடுக்கும் போது மிகவும் கவனமாக இருந்திருக்க வேண்டும்.

முதலில் இந்த நியமனத்தைச் செய்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை எடுத்துக்கொண்டால், அவர் தான் இலங்கை மக்கள் அனைவருக்குமான ஒரு ஜனாதிபதியே ஒழிய, தனியே சிங்கள மக்களுக்கான ஜனாதிபதி மாத்திரம் அல்ல என்பதை மனதில் கொண்டிருக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக ஏனைய ஜனாதிபதிகளின் தேர்வுகளின் போதுபோல அல்லாமல், இவர் இலங்கையில் ஜனநாயகத்தை நிலைநாட்டவென, குறிப்பாக சிறுபான்மை மக்கள் ஏகோபித்து வாக்களிக்க ஆட்சிக்கு வந்தவர். அப்படியிருக்க, குற்றஞ்செய்தவராக சிறுபான்மை மக்களால் குற்றஞ்சாட்டப்படும் ஒருவரை தளபதியாக நியமித்திருக்கிறார். அவர்களின் உணர்வுகளைப் புறக்கணித்துள்ளார். இதனையே ஏனைய பெரும்பான்மைத் தலைவர்களும் செய்தார்கள். அதற்கு மாற்றாக என்று கூறிக் கொண்டுவரப்பட்ட மைத்திரிபாலவும் தமிழ் மக்களை ஏமாற்றியுள்ளார். தமக்கு எதிராக யுத்தக்குற்றத்தைச் செய்ததாக தமிழ் சிறுபான்மை மக்கள் நம்பும் ஒருவரை தளபதியாக நியமித்துள்ளார்.

அடுத்தது, மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் சம்பந்தப்பட்டது. சர்வாதிகார ஆட்சியை இலங்கையில் ஒழிக்க வேண்டும் என்று காரணம் சொல்லி, பல மனித உரிமை அமைப்புக்கள் சேர்ந்து மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்க கடந்த தேர்தலில்

**சீவகன் பூபாலரட்ணம்**

உழைத்தன. அந்த உழைப்புத்தான் இவர் ஜனாதிபதியாகக் காரணமாக இருந்தது. ஆனால், அவர்களில் பலரும் இப்போது ஏமாற்றமடைந்துள்ளனர்.

அடுத்த விடயம் சர்வதேச சமூகம் பற்றியது. இலங்கையின் இறுதிப்போரில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்த விவகாரம் இன்னமும் ஐநாவின் மனித உரிமைப் பேரவையில் இருக்கின்றது. இலங்கையில் ஜனநாயகத்தை, மனித உரிமையை நிலைநாட்ட பல விடயங்களைச் செய்வதாக மனித உரிமைகள் கவுன்சிலுக்கு இலங்கை வாக்குறுதி அளித்துள்ளது. ஆனால், அந்த வாக்குறுதிகள் தொடர்பில் இலங்கைக்கு இருக்கும் பொறுப்பை இந்த நியமனம் குறைத்து மதிப்பிடுவதாக தற்போது ஐநா உட்பட பல சர்வதேச அமைப்புக்களும் குற்றஞ்சாட்டத் தொடங்கியுள்ளன. இது சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம். மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் இலங்கைக்கு எதிர்காலத்தில் சர்வதேச நிறுவனங்களால் கொடுக்கப்படக் கூடிய அழுத்தங்கள் இந்த நியமனத்தை காரணம் காட்டி அதிகரிக்கப்படலாம். இதனால், ஏற்படக்கூடிய பாதிப்புக்களை இலங்கை மக்களே அனுபவிப்பார்கள். ஆகவே சர்வதேச கருத்து குறித்து விரும்பியோ விரும்பாமலோ கவலை கொள்ள வேண்டிய நிலையில்தான் இலங்கை இருக்கிறது. ஆகவே, இந்த நியமனத்தின் மூலம் இலங்கை இந்த

தொடர்ச்சி பக்கம்..15

## 'கிழக்கை மீட்போம்' -- யார், யாரிடமிருந்து மீட்பது?

**'ஒரு தேசப்பற்று மிக்க அரசியல்வாதி கிடைத்தால் உலகப் புகழ் மிக்க நகரங்களில் ஒன்றான வெனிஸ் நகருக்கு நிகராக மட்டக்களப்பு எழுந்து நிற்க முடியும்'**

அண்மைக்காலமாக கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் கிழக்கு என்கின்ற சொல்லாடல் அதிகமாகவே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதுவரை காலமும் 'கிழக்கு என்று பேச்சை எடுத்தாலே அது பிரதேசவாதமாகும்' என்கின்ற ரீதியில் அது பார்க்கப்பட்டு வந்தது.

ஆனால் இன்றோ கிழக்கு மாகாணத்தின் பிரச்சனைகள் வேறானவை, கிழக்கில் இருப்பவர்களே கிழக்கு மாகாண அரசியலை பற்றிய முடிவுகளை எடுக்க முடியும், கிழக்குக்கு வெளியே இருக்கும் தலைவர்களெடுக்கும் முடிவுகள் கிழக்கின் பல்லின சூழலுக்கு பொருத்தமானவையல்ல, கிழக்கின் அரசியல்வாதிகள் ஒருமித்து கைகோர்க்க வேண்டும் என்றவாறாகவெல்லாம் எழுத்துக்களும் பேச்சுக்களும் உரையாடல்களும் விவாதங்களும் நிறையவே நடந்தேறுகின்றன.

இதன் அடிப்படையில்தான் 'கிழக்கை மீட்போம்'என்கின்ற கோஷம் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள்போன்ற கிழக்கை அடிப்படையாக கொண்ட கட்சியினரால் அண்மைக்காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது.

இதுகுறித்து பலருடனும் ஒரு வினவலுக்காக உரையாடியபோது மீண்டும் ஒரு தமிழன் கிழக்கின் முதல்வராக வேண்டும் என்பதையிட்டு சிலர் கருத்து தெரிவித்தனர். வேறு சிலரோ முஸ்லிம்களிடமிருந்து கிழக்கை மீட்பதற்கு ஒரு தலைவன் தேவை என்கின்றனர். இன்னும் சிலரோ யாழ்ப்பாண தலைமைகள் எம்மை தீர்மானிக்கும் பொருத்தப்பாடற்ற வரலாற்று தொடர்ச்சியிலிருந்து கிழக்கை மீட்க வேண்டும் என்கின்றனர். இவ்வாறாக கிழக்கை மீட்போம் என்கின்ற கோசம் பல திசைகளிலுமிருந்து திரட்சி பெற்று

**அறுமக்குட்டி போடி**

வளர்ந்து வருவது தெரிகின்றது.

இதில் எது சரியானதென்றோ எது பிழையானதென்றோ இல்லை. எல்லாமே சாராம்சத்தில் சரியானவைதான். ஆனால் அவற்றையிட்ட தெளிவான புரிதல்கள் பலரிடம் இல்லாமையை அவதானிக்க முடிகின்றது.

கிழக்கு மாகாண மக்கள் பல வழிகளிலும் அடக்கப்பட்டு முடக்கப்பட்டு கிடக்கின்றனர் என்பது உண்மை. ஒரு சமூகம் தான் ஒடுக்குமுறைக்குள்ளாவதை விட தாம் ஒடுக்கப்படுகின்றோம் என்பதை உணராத சமூகமாக கிடப்பது சாபக்கேடானது. அந்த வகையில் கிழக்கு தமிழர்கள் தாம் நீண்டகாலமாக ஒடுக்கப்பட்டு வருகின்றோம் என்பதை உணரத் தலைப்பட்டிருப்பது முக்கியமானதொரு விழிப்புணர்வாகும்.

ஆனால் 'இருந்த காக்காயை வந்த காக்காய்' துரத்துவது போல இலங்கையின் பேரினவாத சக்திகளுக்கெதிராக எழுந்த போராட்டம் இன்று வலுவிழந்த நிலையில் புதிய புதிய பிரச்சனைகள் மேலெழுந்துள்ளன. அதனுடாக பிரதான ஒடுக்குமுறையான சிங்கள பேரினவாதம் மறக்கடிக்கப்பட்டு, உள்ளக முரண்பாடுகள் தலைதூக்கியுள்ளன. ஆனால் சிங்கள மேலாதிக்க சக்திகளின் ஒடுக்குமுறைகள் வெவ்வேறு வழிகளில் இன்னும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. இவையனைத்தையும் ஒருமித்து எதிர்கொள்ளுவதென்பது எப்படி என்பதுதான் கிழக்கு மாகாண மக்கள் அனைவரின் மீதான எதிர்கால சவாலாகும். முஸ்லிம்களோடு உருவாகிவரும் முரண்பாடுகளை பலர் முஸ்லீம் மக்களுக்கெதிரான உணர்வுகளோடு அணுக முயற்சிக்கின்றனர். ஆனால் முஸ்லிம்களின் பெயரில் அரசியல் தலைமைகளாகவும் நிர்வாக அதிகாரிகளாகவும் இருக்கின்ற அதிகார வர்க்கத்தினரே நாம் எதிர்கொள்ள வேண்டியவர்களாகும். அதேபோன்று தான் யாழ்ப்பாண மேலாதிக்க அணுகுமுறை அரசியல் என்பதே நமது எதிரியாகும், மாறாக சாதாரண யாழ்ப்பாண மக்களோ, முஸ்லீம் மக்களோ நமது எதிரிகளாக இருக்க முடியாது.

அது சரி இவற்றையெல்லாம் கருத்தில் கொள்கின்ற, கையாளுகின்ற திறமைகொண்ட கிழக்கு தலைமை ஒன்று மேலெழுந்து அதிகாரத்துக்கு வருகின்றபோது கிழக்கு மாகாணம் மீட்கப்பட்டு விடுமா? என்பதே இன்றுள்ள கேள்வியாகும். அதிகாரத்தில் பங்கெடுப்பதென்பது அவசியமானதுதான். ஆனால் சாமானிய மக்களின் அரசியல் பிரதிநிதியாக அத்தகைய தலைமைகள் செயற்படுகின்றபோதுதான் அது அம்மக்களை மீட்டெடுப்பதாக அமைய முடியும். ஆனால் நமது கடந்த கால தலைமைகளில் பெரும்பாலானவை கட்சி நலன்களையும் சொந்த நலன்களையும் மட்டுமே முன்னுரிமைப்படுத்தினார்கள். இனவாத அணிதிரட்டலில் 'தமிழர் ஒற்றுமை', 'தமிழ் பிரதிநிதித்துவம்' என்பதையிட்டு மட்டுமே அக்கறை கொண்டனர். ஒடுக்கப்படும் சாமானியமக்கள் இவர்களால் பயனடையவில்லை.

ஏனெனில் வெகுஜன மக்கள் இன, பிரதேச அடையாளங்களினால் மட்டும் ஒடுக்கு முறைக்குள்ளாக்கப்படவில்லை. அவர்கள் நாளாந்த சமூக, பொருளாதார, பாலின மற்றும் இன்னபிற சுரண்டல்களுக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள். அவர்களது வளங்கள் உள்ளூர் முதலாளிகளையும் தாண்டி தற்போது பன்னாட்டு நிறுவனங்களின் நிதி மூலதனங்கள் ஆதிக்கத்துக்குள் அகப்படத் தொடங்கியுள்ளன. என்ஜிஓக்கள், தொழில் பேட்டைகள், அபிவிருத்திகள், என்கின்ற பெயர்களில் உலகமயமாதல் எம்மையும் பீடிக்க தொடங்கியுள்ளது.

இவற்றிலிருந்தெல்லாம் எமது மக்களை எப்படி காப்பாற்ற வேண்டும் என்கின்ற குறைந்தபட்ச தேடுதல் கொண்டவர்கள் தலைமைக்கு வருவது அவசியம்.

தொடர்ச்சி பக்கம் 15

# பிறந்த நாள் கொண்டாட்டமும் பிள்ளையானின் விடுதலையும்

**எழுவான் வேலன்**



மட்டக்களப்புப் போராளிகள் புறக்கணிக்கப்படுவதாகக் காரணம் காட்டி விடுதலைப் புலிகளிடமிருந்து கருணா பிரிந்தபோது மட்டக்களப்பு மக்களிடத்தில் கருணாவுக்கான ஒரு ஆதரவு அலை எழுந்ததை அவ்வளவு இலகுவில் மறுத்துவிடமுடியாது. ஆனால் பின்னாளில் அவருடைய அரசியல் அணுகுமுறைகள் காரணமாக அவரால் சனநாயக அரசியலில் எதனையும் பெரிதாகச் சாதித்துக்கொள்ள முடியவில்லை. பிள்ளையான், கருணாவிலிருந்து பிரிந்து வந்து தனிக்கட்சி தொடங்கி முதலமைச்சராக இருந்து முடியுமானவரை மக்கள் சேவையாற்றியதன் காரணத்தினால் மட்டக்களப்பில் அவருக்கான ஆதரவுத் தளம் ஒன்று இருப்பதை எவரும் மறுத்துவிடவும் முடியாது. இந்த ஆதரவுத் தளத்தினை எதிர்காலத்தில் எவ்வாறு மேலும் விஸ்த்தரிக்கப் போகின்றார்கள் என்பது அவர்களுடைய அரசியல் நடத்தைகளிலே தங்கியுள்ளது.

கிழக்கின் அரசியல் களநிலவரத்தைக் கருத்திற்கொண்டு எல்லாத் தமிழ் கட்சிகளையும் ஓர் அணிக்குக் கொண்டு வந்து, ஒரு பொதுச்சின்னத்தில் போட்டியிடுவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட 'கிழக்குத் தமிழர் ஒன்றியம்' எனும் அமைப்பு அந்த முயற்சியைக் கைவிட்டு தான் ஓர் அரசியல் கட்சியாக முடங்கிப்போய்க்கிடக்கிறது. கிழக்குத் தமிழர் ஒன்றியத்தில் இருந்து கட்சிகளை ஒன்றிணைப்பதற்காக உழைத்த திரு த.கோபாலகிருஸ்ணன் கிழக்குத் தமிழர் ஒன்றியத்தினால் ஓரங்கட்டப்பட்டாலும் 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' எனும் ஒரு புதிய கூட்டணியை தாம் உருவாக்கியிருப்பதாகக் குறிப்பிட்டாலும் இந்தக் கூட்டணி இன்னும் மக்கள் முன் தோன்றாது மௌனம் காத்தே வருகின்றது.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான அதிருப்தியை யார் சுருட்டிக் கொள்வது என்ற போட்டி வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் வடகிழக்கின் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் போன்றவர்களிடம் ஏற்பட்டு அவர்கள் கிழக்கை குத்தகைக்கு எடுக்க முனைகின்றனர். அத்துடன் கிழக்கில் புதிது புதிதாக இவர்கள்தான் கிழக்கின் ஆளுமையுள்ள தலைமைகள் என்ற தோரணையில் முகநூல் பிரச்சாரங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. 'விராலில்லா குளத்துக்கு குறட்டையாம் அதிகாரி' என்பது போல் தற்போது கிழக்கின் நிலமை உள்ளது.

மட்டக்களப்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு அடுத்ததாக ஆதரவுத் தளத்தினைக் கொண்ட பிள்ளையானைத் தலைமையாகக் கொண்ட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி இந்த அரசியல் கள நிலவரங்களை காத்திரமான ஒரு விடயமாக எடுத்து கூட்டமைப்புக்கு எதிரான சக்திகளை ஒன்றிணைத்து ஒரு மாற்று அரசியலை முன்னெடுக்கும் என எதிர்பார்த்த போதிலும் எதுவுமே செய்யாது 'நாங்கள் கட்சி நலனை விட்டு எல்லாக் கட்சிகளுடனும் இணைந்து பயணிப்பதற்கு எங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்' என பேச்சளவில் கூறிக் கொண்டு ஒற்றுமைக்கான எந்த ஒரு முன்னுதாரணமான செயலினையும் செய்யாது பிள்ளையானை வெளியில் கொண்டு வருவதிலேயே தங்கள் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கு நாம் மாற்றுத் தலைமை என்பதை 'அ' இருந்த இடத்தில் 'ஆ' வைப் பிரதியிடுவதல்ல என்பதை முதலில் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். 'மாற்று அரசியல் தலைமை' என்பது இதுவரைகாலமும் இருந்து வந்த தமிழ் அரசியல் தலைமைகளிடத்திலிருந்து கொள்கைரீதியாகவும் பண்பு ரீதியாகவும், நடத்தைரீதியாகவும் மாற்றாக இருத்தல் என்பதையே குறிக்கின்றது.

இதுவரைகால அரசியல் கொள்கைகளும் செயற்பாடுகளும் கிழக்குத் தமிழர்களின் இருப்பை பாதுகாப்பதற்குப் பதிலாக அவர்களின் இருப்பை அழித்ததாகவே இருக்கின்றன. ஆனால் மாற்றுத் தலைமை என்பது கிழக்குத் தமிழர்களின் இருப்பை பாதுகாப்பதுடன் ஒரு புதிய அரசியல் பண்பாட்டை உருவாக்கி வளர்த்தெடுக்கவும் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பண்பாட்டில் தலைவர்கள் மக்களுக்கு பொய் வாக்குறுதிகளை வழங்கி, இன உணர்ச்சிகளை ஊட்டி மயக்கி, அந்த மயக்கநிலையில் வைத்துக் கொண்டு அவர்களை தன்வழியில் கூட்டிச் செல்பவர்களாக அன்றி மக்களை அரசியல் மயப்படுத்துவதினூடாக அவர்களை விழிப்பு நிலையில் வைத்திருந்து, அவர்களுடன் இணைந்து அவர்களுடைய பிரச்சினைகளை இனம் கண்டு அவர்களுக்குத் தேவையான பாதையை வகுத்து அதன் வழி மக்களை வழிநடத்திச் செல்லக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இங்கு தனி ஒரு தலைவனுடைய அதிகாரமோ அந்த அதிகாரத்தைச் சார்ந்து வாழும் கூட்டமோ இருக்காது எல்லா உறுப்பினர்களிடையேயும் மக்களிடையேயும் ஒரு சமத்துவ நிலையும் சனநாயக உரையாடலும் இடம் பெறவேண்டும். இந்தச் சனநாயக உரையாடலில் புகழ்ச்சியை விட ஆரோக்கியமான விமர்சனங்களையே தலைமைத்துவம் கருத்தில் எடுத்து செயற்பட வேண்டியிருக்கும். அப்போதுதான் தவறுகள் நடக்காது எல்லோரும் சேர்ந்து இயங்குகின்ற சூழ்நிலை உருவாகும். ஆனால் மக்கள் எதிர்பார்க்கின்ற இந்த மாற்றுத் தலைமை இவற்றைச் செய்வதற்குரிய தத்துவார்த்த தளத்தினையும் அரசியல் பக்குவத்தினையும் கொண்டிருக்கின்றார்களா என்றால் அது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

முகநூலின் வருகையுடன் பிறந்தநாள் கொண்டாட்டம் எனும் ஒரு புதிய பண்பாடு தமிழர்களிடையே வேகமாகப் பரவ ஆரம்பித்திருக்கின்றது. இளையோர்கள் மட்டுமன்றி, தனது பிறந்த நாளே எப்போது என்று தெரியாதிருந்த வயது முதிர்ந்தவர்கள் கூட தங்கள் பிள்ளைகளாலும் பேரப்பிள்ளைகளாலும் பிறந்தநாள் கேக் வெட்டி கொண்டாடப்படுகிறார்கள். இக் கொண்டாட்டங்கள் உடனுக்குடன் முகநூலில் பதிவிடப்பட்டு வாழ்த்துக்களும் விருப்புக்களும் கருத்துக்களும் பெறப்படுகின்றன. அவற்றுக்காகவே இந்தக் கொண்டாட்டங்களும் நடத்தப்படுகின்றன அதாவது கொண்டாட்டத்தில் வாழ்த்துக்கள் என்றில்லாது வாழ்த்துக்காக கொண்டாட்டம் என்ற நிலை இதுவாகும். இது தனிதனித உளவியல் திருப்திக்காக குடும்ப நடத்தைகளை தீர்மானிக்கின்ற போக்காகும். இது ஆரோக்கியமான சமூக நடத்தை அல்ல. குடும்பத்தையும் தன்னையும் காட்சிப்பொருளாகப் பார்க்கின்ற ஒரு பிறழ்வு நடத்தையேயாகும்.

இந்தப் பிறழ்வு நடத்தையினை மக்கள் எதிர்பார்க்கும் மாற்றுத் தலைமையிடத்திலும் காணக்கூடியதாக இருப்பது துரதிஸ்டவசமானதாகும். இங்கு இது பிறழ்வு நடத்தையாக இல்லாமல் மிகத் திட்டமிட்ட சுயநலம் மிக்க செயற்பாடாக அமைகின்றது. அதாவது இந்தக் கொண்டாட்டங்கள் தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை எல்லையினைத் தாண்டி பொதுவெளியில் பொதுமக்களை இணைத்து நடாத்தப்படுகின்றபோது அது தமது தலைவனின் பிறந்த நாளுக்காக மகிழ்வு என்பதிலும் பார்க்க இந்தக் கொண்டாட்டத்தினூடாக தங்களது தலைமைத்துவ விசுவாசத்தினை வெளிப்படுத்தி தலைமைத்துவ வழிபாட்டினை ஏற்படுத்தி தங்களுடைய இருப்பினைத் தக்கவைத்திருப்பதற்கேயாகும். இது மக்கள் எதிர்பார்க்கும் மாற்று அரசியற் செயற்பாடு அல்ல. இது தலைமையின் சர்வாதிகாரத் தன்மையினை வளர்ப்பதோடு தன்னைத் துதிபாடாதவர்கள் எல்லாம் தனக்கு எதிரானவர்கள் என்ற ஒரு மனநிலையையும் தலைமைக்கு ஏற்படுத்திவிடக் கூடியதாகும். இவ்வாறான சம்பவங்களால் சனநாயகத்துக்கு சாவுமணி அடிக்கப்பட்டு சர்வாதிகாரம் சிம்மாசனம் ஏற்றப்படுகின்றது.

பிள்ளையான் குற்றமற்றவர் எனில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதும் அவர் பொதுவெளியில் தனது அரசியல் சமூகச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதிலும் அதற்காக போராடுவதிலும் எந்த தவறும் இல்லைதான். ஆனால் இந்தக் கோரிக்கைகளை அவருடைய பிறந்த நாளை முன்னிட்டு ஒரு கொண்டாட்டமாகச் செய்யும் போது அந்தக் கோரிக்கைகளின் நியாயத்தன்மைகள் குறைந்து கொண்டாட்டத்துக்கான கோரிக்கைகளாக முன்கொண்டு வரப்படுகின்றன. அத்துடன் கிழக்குத் தமிழ் மக்களுக்காக தங்கள் கட்சி நலனை விட்டு தமிழ் கட்சிகளுடன் ஒன்றித்துப் பயணிக்கத் தயாராக இருப்பதாகக் கூறிக்கொள்பவர்கள் மக்களுடைய மனநிலையை புறந்தள்ளிவிட்டு கட்சி நலனையும் தலைவர் விடுதலையையும் முன்னிலைப்படுத்தி தங்களுக்குத் தோதானவர்களுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டாட்டங்களில் ஈடுபடுவது எந்தவகையிலும் கிழக்குத் தமிழர்களின் மாற்று அரசியலுக்கான பாதையாக இருக்க முடியாது. நெல்சன் மண்டேலா அவர்கள் 25 வருடகாலம் சிறையில் இருந்து கொண்டுதான் தனது கட்சியினை வளர்த்து தென்னாபிரிக்காவின் சனாதிபதியும் ஆனார். அவர் எந்த ஒரு இடத்திலும் தனது விடுதலைக்காக சோரம் போய்விடவில்லை என்பதை கவனத்தில் கொள்வது முக்கியமானதாகும்.

முன்பு ஒரு தடவை இந்தப் பத்தியில் 'பிள்ளையானை பிள்ளையாராக ஆக்கி பூசிக்கப்பட வேண்டியவ ஒருவராக உருவாக்காமல் விமர்சனத்துக்கும் மாற்றத்துக்கும் உரிய தலைவராக பிள்ளையானை எடுத்துக்கொள்வதே இன்றைய கிழக்கின் தேவையாகும்.' எனக் குறிப்பிட்டிருந்தேன். இப்போதும் அதனையே சற்று உரத்துக் கூறுவதுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உங்களுடன் சேர்ந்து செயற்பட அழைக்கும் உங்கள் இராஜதந்திரச் செயற்பாடுகளை விட்டு விட்டு, உங்களுடன் சேர்ந்தியங்க முன்வருகின்ற கட்சிகளை ஒன்றிணைத்து உங்கள் கட்சி நலனையும் தனிநபர் நலனையும் தள்ளிவைத்து, கிழக்குத் தமிழர்களின் நலனை முன்னிறுத்தி அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பது காலத்தின் கட்டாயமாகும்.

# பிள்ளையானின் எழுச்சியும் இரண்டு கூட்டும்




இந்த வார மட்டக்களப்பு அரசியல்பரப்பு தொடர்ந்தும் பரபரப்பாகவே அமைந்துள்ளது. ஒவ்வொரு வாரமும் ஏதோவொரு விடயம் மெல்லுவதற்கு கிடைத்தவண்ணமே இருந்தது. வரட்சி, குடிநீர்த் தட்டுப்பாடு என மெல்லத் தொடங்க, மழை வந்து தணிக்கத் தொடங்குவதற்கு முன்பாகவே குப்பை விடயம் பேசு பொருளாகியது, நாட்டின் குப்பையல்ல, மட்டக்களப்பு வைத்தியசாலையின் குப்பை.

குப்பை அரசியலாக ஆட்கொள்ள கிளம்பியது ஒரளவு அணைக்கப் பட்டுள்ளது. தொடர்ந்து ஹிஸ்புள்ளாவின் பல்கலைக் கழகத்தை அரசுடமையாக்கச் சொல்லி மதகுருமார்களின் ஆர்ப்பாட்டம் கிரானிலும் மட்டக்களப்பு நகரிலும் நடைபெற்றது. இதனிடையே பிள்ளையானின் பிறந்த தினம் வர, அதனை எழுச்சி விழாவாக கொண்டாடியமையே இன்றுவரை பேசுபொருளாக நீடிக்கிறது.

**வ.முரளீசேகரன்**

பிள்ளையான் எனப்படும் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் 44 வது பிறந்த தினத்தை மூன்று கோரிக்கைகளை முன்வைத்து எழுச்சி விழாவாகக் கொண்டாட தீர்மானித்தனர். "பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு, பிள்ளையானை விடுதலை செய், சனநாயக வெளியில் அரசியல் செய்ய பிள்ளையானை அனுமதி, இன்றைய கிழக்கிற்குத் தேவை பிள்ளையான்" என்ற கோசங்களை முன்வைத்து காந்தி பூங்காவிலிருந்து ஓர் ஆர்ப்பாட்டப் பேரணியும் பொதுக் கூட்டமும் நடந்தன.

ஏற்பாட்டாளர்களின் எதிர்பார்ப்பையும் மீறி தொகையாக மக்கள் அணி திரண்டதனால் ஏற்பாட்டாளர்கள் தடுமாறிப் போய் விட்டனர். ஏனைய கட்சிகள் மீது மக்கள் கொண்டுள்ள அதிருப்தி, வாழ்க்கைச் சுமை, அண்மைக் காலமாக மட்டக்களப்பு எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகள், புதிது புதிதாக வெளிக்கிளம்பிக் கொண்டேயிருக்கும் விடயங்கள், ஒரு வித சலிப்பும் ஆக்ரோசமும் மாற்றம் வேண்டிய எதிர்பார்ப்பும் என மக்களை இலகுவாக அணி திரளப்பண்ணியுள்ளன.

எப்படியோ இந்த மக்களின் திரட்சி ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான கோரிக்கையின் குறியீடுதான் என்று கொள்ளவேண்டியுள்ளது. இது சனாதிபதித் தேர்தலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தா விட்டாலும், தொடரும் நாடாளுமன்ற, மாகாணசபைத் தேர்தல்களில் நிச்சயம் ஒரு மாற்றம் நிகழலாம் என்ற எதிர்பார்ப்பை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

அண்மைக்காலமாக பிள்ளையான் போன்ற ஒருவரின் தேவை பலரை சிந்திக்கப் பண்ணியுள்ளது. முடிவடைந்த வடக்கு மாகாண சபை, முடிவடைந்த கிழக்கு மாகாண சபை என்பன அதற்கு முந்திய மாகாண சபையூடனான ஒப்பீடு, தற்போது நடந்தேறுகின்ற பல விடயங்கள், தங்கள் இருப்பு மீதான சந்தேகங்கள் என தொடரும் இழுபறிகள் பலரைச் சிந்திக்கத் தூண்டியுள்ளன.

மக்கள் எழுச்சியையும் மக்கள் அலையென திரண்டமையும் பலரையும் சிந்திக்கத் தூண்டியுள்ளமையுடன் பேரம் பேசும் ஆற்றலையும் அதிகரித்துள்ளது. அவை மக்கள் நலனுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை அமைச்சர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் என பல அரசியற் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அதில் குறிப்பாக மட்டு, அம்பாறை, திருமலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரமுகர்களின் வருகை இவர்களும் ஏற்கனவே வரும் சனாதிபதித் தேர்தலில் எந்தக் கோரிக்கைகளும் இன்றி யாரை ஆதரிப்பது என்ற தீர்மானத்தை மேற்கொண்டுவிட்டார்களோ என்ற வலுவான சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பிற்கு வந்த சுமந்திரனின் வருகையும் யாருக்கு ஆதரவு என்று எந்தவித கோரிக்கையும் இன்றி சில விடயங்களை சொல்லாமல் சொல்லிவிட்டுச் சென்றார். எனவே இரண்டு கூட்டுக்களைக் கொண்டுள்ள இவர்கள் தங்கள் கூட்டை தாங்களே முன்நிபந்தனையின்றி தீர்மானித்துக் கொள்கின்றனரா?



மக்களைப் பற்றி சிந்திக்க வேண்டும். மக்களின் மனநிலையை அறிந்து கொள்ளவேண்டும். நல்ல மாலுமியாக இருந்து மக்களை சரியான திசைநோக்கி முன்னகர்த்த வேண்டும். இரண்டு கூட்டுக்களும் தங்கள் தங்கள் சுயநலத்துக்காகவென்றால் மக்கள் மூன்றாவது கூட்டை நோக்கி அணி திரள முற்படுவர். அதனை யாராலும் அணைபோட முடியாது. தானாகவே அதுவே நிகழும்.

---

# மல்லிகைத்தீவில் குடிநீர் நச்சுநீராகியதால் மேலும் மூவர் சிறுநீரகநோயினால் பாதிப்பு: யாரும் கவனிப்பதாயில்லை!



(காரைதீவு சகா)

குடிநீர் நச்சுநீராக மாறிவருவதனால் அம்பாறை மாவட்டம் மல்லிகைத்தீவுக் கிராமத்தில் மேலும் மூவர் சிறுநீரகநோய்க்கு இலக்காகியுள்ளனர்.

ஏலவே இங்கு சிறுநீரகநோயினால் பாதிக்கப்பட்டு மூவர் மரணமாகியதுடன் ஆறுபேர் சிறுநீரகநோய்க்குள்ளாகி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் மல்வத்தையையடுத்துள்ள மிகவும் பின்தங்கிய மல்லிகைத்தீவு கிராம தமிழ் மக்கள் மரணபயத்துடன் வாழ்ந்துவருகிறார்கள். அங்கு 95 குடும்பங்களைச் சேர்ந்த 275பேர் வாழ்ந்துவருகின்றனர்.

அங்குள்ள பொதுக்கிணறு உள்ளிட்ட சகல 42 கிணறுகளிலும் கல்சியம் மற்றும் விவசாயத்திற்குப் பயன்படும்



இரசாயனப்பொருட்கள் கலந்துள்ளதால் நீர் நஞ்சாக மாறிவருகிறது. அதனால்



அங்குள்ள மக்கள் சிறுநீரக நோய்க்கு ஆளாகிவருகின்றனர்.

இப்பிரச்சினை வெளிஉலகிற்கு கொண்டுவரப்பட்டு பல மாதங்களாகியும், ஆக சம்மாந்துறை பிரதேசசபையின் உபதவிசாளர் வெ.ஜெயச்சந்திரனைத்தவிர இதுவரை யாரும் வந்துபார்க்கவுமில்லை என்பதுடன் காத்திரமான நடவடிக்கை எடுக்கவில்லையென பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச்சபையினர் இக்கிராமத்திற்கு குழாய்களைப் பதித்து குடிநீர் வழங்கினால் மாத்திரமே இப்பிரச்சினைக்கு நிரந்தரதீர்வுகாணலாம்.

இதற்கான நடவடிக்கைகளை தமிழ்மக்களின் காவலர்கள் என்று சொல்வோர் நடவடிக்கை எடுப்பார்களா? இது பொதுமக்களின் கோரிக்கையாகும்.



# படுவான் திசையில்

பக்க அனுசரணையாளர்:
" அலையப்போடி நல்லரெத்தினம் (ஸ்தாபகர்)
அறிவாலயம் அறக்கட்டளை நிதியம்
பண்டாரியாவெளி கொக்கட்டிச்சோலை "

## அறநெறிக்கல்வி முக்கியமிழக்கின்றதா?



இப்போது எல்லாம் அறநெறிப் பாடசாலைகளுக்கு பிள்ளைகள் செல்வதில்லை. முதலெல்லாம் ஞாயிற்றுக்கிழமையானால் அறநெறிப்பாடசாலைகளிலேயே நிற்போம் என்கிறார் சிதம்பரப்பிள்ளை. மகிழடித்தீவு சந்தியில் நின்ற கணேசபிள்ளையுடன் பேசும்போதே இதனைக் குறிப்பிட்டார். அறநெறிப்பாடசாலைகள் சமயத்தின் ஊடாக ஒழுக்கத்தினை புகட்டும் நிலையங்களாக இருந்தன. பெற்றோர்களும் சமயக்கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து அறநெறிப்பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்பினர். இன்றைய சூழலில் அறநெறிப்பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்பவதில் பெற்றோர்கள் அக்கறை காட்டுவதில்லை. அறநெறிக்கல்வியினை அவசியமற்றதாக அல்லது தேவையில்லையென உணர்ந்திருக்கின்றனரோ தெரியவில்லை. அதேநாளில் நடைபெறுகின்ற வேறுபாடங்களிலான தனியார் வகுப்புக்களுக்கே அனுப்புகின்றனர். பணத்தினை கொடுத்து வேறு வகுப்புக்களுக்கு அனுப்பும் அக்கறையை பணமில்லாமல் போதிக்கப்படும் அறநெறிக்கல்விக்கு முக்கியத்துவமளிக்காது செயற்படுகின்றமை மனவேதனையே. ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறி வகுப்புக்களை தவிர்ந்த வேறுயெந்த வகுப்புக்களும் நடைபெறக்கூடாதென அபிவிருத்திக்குழுக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டாலும் கூட, பணத்திற்காக தனியார் கல்விநிலையங்களை நடாத்தும் சிலர், சமுகத்தின் மீது அக்கறையின்றி ஞாயிற்றுக்கிழமைகளில் ஏனைய வகுப்புக்களை நடாத்துவதும் கவலைக்குரியதே. கல்வி கற்ற சமுகத்தினர் சிலரே இத்தவறினை இழைக்கின்றனர். தீர்மானங்களும், சட்டங்களும் ஒருபக்கமாகவிருந்தாலும் தமது சமுகத்தின் நன்மை கருதி உள்ளார்ந்து சிந்திக்காது செயற்படுகின்றமை வேதனைக்குரியதே என்கிறார் சிதம்பரப்பிள்ளை.

முன்பெல்லாம் பாடசாலை சென்று கற்காவிட்டாலும், பெற்றோரிடம் இருந்து நல்ல ஒழுக்கத்தினைப் பிள்ளைகள் கற்றுக்கொண்டனர். வயதிற்கு மூத்தவர்களுக்கு மரியாதை கொடுத்தனர், அவர்களின் சொற்படி நடந்து கொண்டனர். இயலாது எனக்கூறாமல் காரியத்தினை நிறைவேற்ற முன்வருவர். கூட்டாக இணைந்து செயற்படுவர், நல் தலைமைத்துவப் பண்பும் இருந்தது. தற்காலத்தில் பிள்ளைகள் எல்லோரும் பாடசாலை சென்று புத்தகத்தினை கற்கின்றனர். ஆனால் அவர்களிடம் ஒழுக்கத்தினை காணவில்லை. முன்பெல்லாம் எவ்வாறு ஒழுக்கத்துடன் வாழ்ந்தார்களோ அதற்கு எதிர்மாறாகத்தான் நடந்துகொள்கின்றனர்.

'இப்போது நடைபெறுவது கலியுக காலம், அவ்வாறுதான் ஒழுக்கமின்றி பிள்ளைகள் நடந்துகொள்வார்கள்' என பழியை காலத்தின் மீது போட்டுவிடுகின்றனர் என்கிறார் கணேசபிள்ளை. முன்பெல்லாம் பிள்ளைகளுக்கு கண்டிப்பு இருந்தது. அதை செய்யக்கூடாது, இதைசெய்யக்கூடாது, இப்படித்தான் செய்ய வேண்டும் என்ற நல்ல சிந்தனைகளை கண்டிப்பின் ஊடாகவே புகட்டினர். இதனால் தவறான நடத்தைகளுக்கு பிள்ளைகள் சென்றமை மிகமிகக் குறைவே. கண்டிப்பு செய்யக்கூடாதென பலரும் கூறினாலும், இதன்மூலமாக பெறப்பட்ட ஒழுக்க வெற்றி மேலானதாகவிருந்தது. பாடசாலைகளில் கூட மாணவர்கள் தவறிழைக்கின்ற போது சிறுசிறு தண்டனைகள் வழங்கப்பட்டன. இதனால் பெரிய தண்டனைகளை சிறைச்சாலைகளில் பெற்றுக்கொள்ளாமல் வளர்க்கப்பட்டனர். தற்போதைய சூழலில் புதிய புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டமையினால், தவறுவிடுகின்ற பிள்ளைகள் தண்டிக்கப்படுவதில்லை. தண்டிப்பது குற்றாமாகவிருந்தாலும், தவறினை பிள்ளைகளுக்கு எடுத்துச்சொல்லியும் அத்தவறினை திருத்திக்கொள்வதில் பெரிதும் அக்கறை காட்டுவதாகத் தெரிவதில்லை. குறிப்பாக பிள்ளைகள்

**படுவான் பாலகன்**

எல்லோரும் பெற்றோர்களுக்கு பயந்து தமது செயற்பாடுகளை முன்னெடுத்தமை கடந்த கால அனுபவங்களாக இருந்தன. தற்போதைய சூழல் பிள்ளைகளை கண்டு பெற்றோர்கள் அச்சமுறும் நிலை உருவாக்கப்பட்டிருக்கின்றது. இதற்கு அறநெறிக் கல்வியினை பெற்றுக்கொள்ளாமையும் காரணமாகும்.

அறநெறிக் கல்வியின் ஊடாக சிறந்த அறநெறிக்கருத்துக்கள் புகட்டப்பட்டன. இதனை ஏற்றுபிள்ளைகள் நடந்துகொண்டனர். சமய விழுமியங்களை பேணுகின்றவர்களாவும் இருந்தனர். இன்று இவையெல்லாம் நீங்கி சிறுவயதிலே போதை மருந்துகளுக்கு அடிமையாகி, இளைஞர்கள் உருவாகி வருகின்றனர். இதன்காரணமாக நல்லது எது? கெட்டது எது? எனத்தெரியாமல் நடந்துகொள்கின்றனர்.

தற்போதைய இளைஞர்கள் மத்தியில் அறிவுரைகள் சொல்லமுடியாதுள்ளது. அறிவுரைகளை கேட்பதற்கு தயாராகவில்லை. நல்சிந்தனைகளை கூறுகின்ற போது, கூறுகின்றவர்களுக்கு விமர்சனங்களைத் தெரிவிக்கின்றனர். முற்றுமுழுதாக எல்லோரையும் குறிப்பிடாவிட்டாலும் பலரின் செயற்பாடு அவ்வாறு அமைகின்றமையினை காணமுடிகின்றது. இதன்காரணமாக சமுகத்திலே வீண் வாக்குவாதங்களும், மனக்கசப்புக்களும் உருவாகின்றன. பிள்ளைகளுக்கு புத்தகக் கல்வியினை மாத்திரம் கற்பித்தால் போதாது, புத்தகக் கல்வியை மாத்திரம் கற்ற பல கல்விமான்கள் பலர் சமுகத்தில் தவறிழைக்கின்றவர்களாக, சமுகத்திற்கு ஈடுகொடுக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். என்று கூறிய கணேசபிள்ளை. 'பிள்ளைகளுக்கு புத்தக கல்வியை போதிக்கும் முன் சிறந்த ஒழுக்க கல்வியினை புகட்ட வேண்டும். இதன்மூலமே சமுகத்திற்கு சிறந்தவர்களை கொடுக்க முடியும். இதற்கு அறநெறிபோன்ற கல்விச்செயற்பாடுகளுக்கு பெற்றோர்கள் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். பிள்ளைகளை தேடிபிடிப்பதில் ஆசிரியர்கள் காட்டும் அக்கறையை கூட பெற்றோர்கள் காட்டாமல் இருப்பதே வேதனைக்குரியது' எனக்கூறியவர்களாக இருவரும் அவ்விடத்தினை விட்டு அகன்றனர்.


# நினைவஞ்சலி

28ஆம் வருடம



அமரர். சி.சம்பந்தமூர்த்தி
(1930.07.16)
(1991.09.09)

3ஆம் வருடம்



அமரர். ச.நிர்மலா
(1939.10.01)
(2016.09.02)

வாழ வைத்தவர்கள், வழிகாட்டிகள்
ஞானம் வழங்கி, ஞாலத்தைக் காட்டிய
நல்ல அப்பா அம்மா உங்களுக்கு
கண்ணீரால் அஞ்சலி

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

பவானிவாசா, பிரதான வீதி, செங்கலடி, மட்டக்களப்பு

# இப்படியும் ஒரு காலம் நிலவியது : கதை— 11




## பேராதனைப் பல்கலைக் கழக இஸ்லாமிய மாணவத் தோழர்கள்----அது ஒரு பொற்காலம்

*(எல்லா இனத்துப் பேரப் பிள்ளைகளுக்கும் ஒரு பாட்டன் சொல்லும் பழம் கதைகள் - 9)*



பேராதனைப் பல்கலைக்கழக்காலத்தில் என்னோடுஉடன் படித்தஇஸ்லாமிய நண்பர்கள் இன்னும்மனதில் பதிந்துபோயுள்ளனர். அமீர்அலி, ஜமீல்மஃபூல், ஹமீட், மீறாசாஹிப் ஜலீல் ஜமால்மஹ்ரூப், சுக்ரி எனஎனது உடன் சாலை மாணாக்கர் ஞாபகம்வருகிறார்கள்.

அது 1960 களின் முற்பகுதி பேராதனைப்பல்கலைக்கழகத்தில் முதலாம்வருட மாணவர்களாக அடிஎடுத்து வைக்கிறோம். என்னை ஒருமாணவன் ராக்பண்ண வருகிறான். அந்த நாளில்ராகிங் இப்போதுபோல அல்ல பலாத்காரம்வன்முறை அதில்கொஞ்சமும் இராது, வாயால் துன்புறுத்துதல்மாத்திரம் தான்இருக்கும். அதுவும் எல்லைதாண்டாது. எனக்குஅருகில் வந்த ஒரு சீனியரானமாணவன் என்பெயரைக் கேட்கின்றான்.

அட்டகாசமான பேச்சு கலகலவென்ற சிரிப்பு. ஊதிப்பெருத்த சொக்கு. அழகான நெடியதோற்றம் "டோய் உன்ரபெயர் என்னடா?".

"மௌனகுரு" என்கிறேன்'ஹாஹா ஹா" என்றுசிரிக்கிறான் "டோய் இவற்றபெயர் மௌனகுருவாம்" என்கிறான். அவன்நண்பர்கள் என்னுடன்மொய்த்து விடுகின்றனர், ஒரு ஆஜானுபாகுவான சீனியர் என் அருகில் வருகின்றான்.

அவனைச் சூழ அவனது நண்பர்கள் நிற்கின்றனர். நாமோ கையாகாத யூனியர்ஸ்.எனக்கோ மீசை அரும்பி வரும் பருவம். பார்க்கச் சற்று லட்சணமாக இருப்பேன். "அடோய் நீ பெண் பிள்ளைகள் யாரையாவது கொஞ்சியிருக் கிறாயாடா?" அந்தச் சீனியர் மாண்வன் என்னிடம் அதட்டலாகக் கேட்கிறான். நான் வெட்கத்துடன் நெளிந்தபடி "இல்லை"என்கிறேன்.

"அடோய் இப்போது நாங்கள் ஒரு பெண்பிள்ளையை உன்னிடம் தரப் போகிறோம் அவளை நன்றாகத் தழுவிக் கட்டிப் பிடித்துக் கொஞ்ச வேண்டும் தெரியுமோ? நன்றாகக் கொஞ்சாவிட்டால் அவள் உனக்கு அறைந்து போடுவாள். மிக மோசமான மனுசி அவள் தெரியுமோ?' எங்கிறான். எனக்கோ பரபரப்பும் வெட்கமும் பயமும் திகைத்து நிற்கிறேன்.

"வாடா அந்தப் பெண்ணிடம் போவோம். அவள் அங்கதான் உன்னைக் காத்துக் கொண்டு நிற்கிறாள் கஸ்டமான பொம்புள கவனமாகப் பழகிக்கோ" என என்னிடம் சொல்கிறார் அந்தச்சீனியர். நானோ கிராமத்தான், வெள்ளாந்தியான குணாம்சம் எதையும் நம்பிவிடும் கிராமிய மனசு,பரபரப்போடும் பயத்தோடும் நான் அந்தக் கடுமையான பெண்ணைக் காணச் செல்கிறேன்.

பெரும் பெரும் தூண்கள் நிற்கும் பகுதிக்கு என்னை அவர்கள் அழைத்துச் செல்கிறான். சென்ற அவன் ஒரு தூணைக்காட்டி"இதுதான்ரா அந்தப் பெண்பிள்ளை ஆசைதீரகொஞ்சடா" என்கிறான். நான் தயங்குகின்றேன், "கொஞ்சடா, பிறியாகப் பொம்பிளைகிடைக்கிறாள் இவர் கொஞ்சப் பன்சிப்படுறார் கொஞ்சடா" என்று அடிக்குமாப்போல உறுக்குகிறான். நான் தயங்குகிறேன் ஒருசீனியர் முறைக்கிறான் கறுத்த ரூபத்திலிருந்த அவன் கண்முழிகள் என்னைப் பயங்கரமாக வெருட்டுகின்றன,மெல்ல கல்தூணுக்கு நான் முத்தம் கொடுக்கிறேன்.

அவர்கள் கைத் தட்டிச் சிரிக்கிறார்கள் அந்தச் சீனியர் மாணவன் "பொம்பிளையக் கொஞ்சுறது இப்படியோடா? நன்றாக இறுக்கித் தழுவிக் கட்டிப் பிடித்துக்கொஞ்சடா" என்கிறான். நான் கற்தூணைத் தழுவுகிறேன்,இவனோ "இஞ்சபாரடா ஆள் கிடைக்காமல் இவன் கல்லோட லவ்மேக் பண்ணுகிறான்" என என்னைப் பைத்தியகாரன் ஆக்குகிறான். என் முகத்தில் அசடு வழிகிறது.

இப்படி என்னை ராகிங் பண்ணியவர்தான் பின்னால் எனது நெருக்கமான நண்ரான மக்பூல். மக்பூல் யாழ்ப்பாணம் முஸ்லீம் தெருவைச் சேர்ந்த மாணவன்.

மக்பூல் பல்திறன் வாய்ந்தவர், தமிழில் நல்ல பேச்சாளர் தமிழ் பாடத்தில் கெட்டிக்காரன் எனப்பெயர் எடுத்தார். விவாதப் போட்டிகளில் தலைமை தாங்கி தன் அணி வெற்றி பெறச் செய்பவர், நான் முதலாம் ஆண்டில் இருந்த போது அவர் இரண்டாம் ஆண்டில் இருந்தார், இருவரும்ம் ஒரு விவாதப்போட்டியில் கலந்து கொண்டோம். பேராசிரியர் வித்தியானந்தனின் அபிமான மாணவர்களுள் ஒருவர் இந்த மக்பூல். பேராசிரியர் வித்தியானந்தன் தயாரித்த கர்ணன் போர், நொண்டி நாடகம் ஆகிய நாடகங்களுக்கு உதவி செய்து மாணவரிடையே ரிக்கற் விற்றுத்தந்து, நாடக வளர்ச்சிக்கு உதவியவர் இந்த மக்பூல்.

மக்பூலைப்போல தமிழில் பேச்சு வன்மையும் எழுத்துவன்மையும் மிகுந்த மூன்று இஸ்லாமிய மாணவர்கள் இருந்தனர். ஒருவர் எஸ், எச் எம் ஜமீல் மற்றவர் அமீர் அலி இன்னொருவர் எம் எம் சுக்ரி. ஜமீலும் அமீர் அலியும் எனது சீனியர்கள் சுக்கிறி என் ஒரு சாலை மாணாக்கர். அம்முறை முதலாம் வருடத்தில் தமிழ் பாடத்தில் அனைத்து தமிழ் மாணவர்களையும் விட அதிக புள்ளிகள் பெற்றவர் ஜமீல் ஆக இருந்தார். ஜமீலும் அமீர் அலியும் சுக்கிறியும் தமிழில் மிகச் சிறந்த பேச்சாளர்கள் என அன்று பரவலாக அறியப்பட்டிருந்தனர். ஜமீல், அமீர் அலி, மஹ்பூல், சுக்கிறி ஆகிய நால்வரும் தம் தமிழ்த் திறமையினால் சகல தமிழ் மாணவர்களிடையேயும் மிகுந்த மதிப்பு பெற்ற மாணவர்களாயிருந்தனர்.

மக்பூலின் தம்பி மஹ்ரூப் என்னுடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்தவர், எனக்கு நெருக்கமானவர் அவரை நான் மாமா என்றுதான் அழைப்பேன். மக்பூலின் அண்ணர் ஹாமீம் யாழ்ப்பாண ஒஸ்மானியா கல்லூரி அதிபராக இருந்தவர்.



நான் 1976 களில் யாழ்ப்பாணத்திற்கு மாற்றம் பெற்றுச் சென்றபோது அங்குள்ள பாட்சாலைகளில் இடம் கிடைப்பது கடினமாயிருந்தது. அப்போது தன் அண்ணன் ஹாமீமிடம் சொல்லி எனக்கு ஒஸ்மானியாவில் இடம் எடுத்துத் தந்தவர் இந்த மஹ்பூலே. பின்னர் இவர் மன்னார் அரசாங்க அதிபராகவும் இருந்தார். இயக்கமொன்றால் கொலையுமுண்டார்.

சுக்கிரி இன்னொரு விதத்தில் கெட்டிக்காரர். அவர் நல்ல பேச்சாளார், நல்ல கட்டுரை ஆசிரியர், நல்ல சிறு கதை ஆசிரியர். அன்று செங்கை ஆழியான் எனப்பெயர் பெற்ற குணராஜா வெளியிட்ட கதைப் பூங்கா எனும் சிறுகதைத் தொகுப்பில் இந்தச்ச்சுக்கிரி ஒரு சிறுகதையும் எழுதியுள்ளார். தமிழ் சங்க வெளியீடான இளம் கதிர் பத்திரிகையில் சுக்கிரி எழுதிய தமிழை வளர்த்தோரும் தமிழால் வளர்ந்தோரும் எனும் கட்டுரை அன்று தமிழ் விரிவுரையாளர்களால் பெரிதும் பாரட்டப்பட்ட கட்டுரை, இவ்வண்ணம் அன்று அங்கு படித்த இஸ்லாமிய மாணவர்கள் தமிழில் மிகவும் பிரகாசித்தார்கள். முதலாம் வருடத்தில் இந்த சுக்கிரியும் நானும் அருகருகே இருந்து பேராசிரியர் வித்தியானதன், பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் காணபதிப்பிள்ளை, பேராசிரியர் செல்வனாயகம் ஆகியோரிடம் தமிழ் பயின்றோம். இரண்டாம் வருடத்தில் சுக்கிரி அரபிக்கில் விசேட கற்கை நெறி பயிலச் சென்று விட்டார். அவர் அராபிய, பாரசீல இலக்கியங்களை பேராசிரியர் இமாமிடம் கற்றார், இமாம் ஓர் புகழ் பெற்ற பேராசான், நான் தமிழ் விசேட கற்கை நெறியை மேற்கொண்டேன்.

இருவரும் தொடர்ந்தும் நண்பர்களாக இருந்தோம். பல்கலைக்ழகத்தில் பயின்று பின் தன் உயர் பின் பட்டப்படிப்பை வெளி நாட்டில் முடித்த பின், சுக்கிரி 1973 இல் நளீம் ஹாஜியாரால் உருவாக்கப்பட்ட பேருவளை ஜாமியா நளீமியா பலகலைக்கழகத்தின் தலைமைப்பதவியை ஏற்றார். பல்கலைக்க்ழகப் பருவத்தில் அவர் ஓர் தீவிர வாசகர். நம்மில் சிலரும் அவ்வாறே தீவிர வாசகர்கள். பல்கலைக்கழகக் கன்ரீனில் இருவரும் சந்திக்கும்போது நான் ராகுல்ய சாங்கிருத்யாயன், டாங்கே சட்டோபாத்யாய என இந்திய உலோகாயுத வாதம் பேச, அவரோ ராதாகிருஸ்ணன் சங்கராச்சாரியார் என இந்திய ஆன்மிகவாதம் பேசுவார்.

நாம் கார்ல்மார்க்ஸ், ஏங்கல்ஸ் பார்வையில் உலக சரித்திரம் விளக்க, அவரோ றொயின்பீ பார்வையில் உலக சரித்திரம் பேசுவார். ஆரோக்கியமான விவாதங்கள் எம்மிடை நிகழும். இஸ்லாம் மீது மஹா அபிமானம் கொண்ட அவர் மூலம் நாம் இஸ்லாம் மதம் பற்றி நிறைய அறிந்து கொண்டேன். அண்மையில் கூட இருவரும் கொழும்பில் ஒரு கூட்டத்தில் சந்தித்துக்கொண்டோம். பழைய இனிய நினைவுகளை மீட்டோம். இன்றைய அவல நிலைகளை எண்ணித் துக்கித்தோம்.

இப்படி எனக்கு அங்கு கிடைத்த இன்னொரு இஸ்லாமிய மாணவ நண்பன் மீறாசாஹிப், கெக்கிறாவையைச் சேர்ந்த இவனே எனக்கு சரதசந்திராவின் சிங்கபாகு நாடகத்தையும் நடிகர்களையும் அறிமுகம் செய்து வைத்தான் என்ற செய்தி உங்களுக்கு வியப்புதரக்கூடும். அது இன்னொரு கதை...

# ஏனோ மனதுக்கு பிடித்த சில படங்கள்





பதிந்தவர் : எழுத்தாளர் எஸ்.எல்.எம். ஹனீபா







# விளையாட்டு

## முதலாவது மாற்று வீரராக வரலாறு படைத்த அவுஸ்திரேலியா வீரர்



இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையில் இடம்பெற்று முடிந்த இரண்டாவது ஆஷஸ் போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் ஸ்மித் காயத்தால் வெளியேறியதால் அவருக்குப் பதிலாக மாற்று வீரராக களமிறங்கி துடுப்பெடுத்தாடிய லாபஸ்சேக்னே வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற 2-வது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிந்தது.

குறித்த போட்டியின் முதலாவது இன்னிக்ஸில் அவுஸ்திரேலியா அணி துடுப்பெடுத்தாடும்போது ஆர்சர் வீசிய பவுன்சர் பந்து ஸ்மித்தின் கழுத்து பகுதியை பலமாக தாக்கியது. இதனால் நிலைகுலைந்து கீழே விழுந்து சிறிது இடைவெளிக்குப்பின் மீண்டும் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழந்தார்.

ஆனாலும் அவரது மூளைப்ப பகுதியில் பந்து தாக்கியதால் தொடர்ந்து விளையாட முடியவில்லை. அவருக்குப் பதிலாக மாற்று வீரர் துடுப்பெடுத்தாடுவதற்கு போட்டிக்கான வைத்தியர்கள் பரிந்துரை செய்ததற்கமைய மாற்று வீரராக மார்னஸ் லாபஸ்சேக்னே இரண்டாவது இன்னிங்சில் களம் இறங்கி அரைசதம் அடித்து போட்டியை சமநிலை அடையச் செய்ய முக்கிய காரணமாக இருந்தார்.

இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் முதன்முறையாக மாற்று வீரர் துடுப்பெடுதாடி சாதனை படைத்தார் மார்னஸ் லாபஸ்சேக்னே.

## மென்பந்து சுற்றுப்போட்டியில் எதிரொலி அணி வெற்றி



(காரைதீவு நிருபர் சகா)

சிவசக்தி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மட்டு அம்பாறை மாவட்ட முன்னணி விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான இருபதுக்கு இருபது மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி, துறைநீலாவணை பொது மைதானத்தில் (18) மாலை இடம்பெற்றது.

தெரிவுசெய்யப்பட்ட 32 விளையாட்டு கழகங்களுக்கிடையிலான இப்போட்டியில் இறுதிப்போட்டிக்கு மட்டக்களப்பு எவகிறீன் மற்றும் தம்பிலுவில் எதிரொளி விளையாட்டுக் கழகம் ஆகியன தெரிவுசெய்யப்பட்டிருந்தன.

நாணயச் சுழற்சி வெற்றி பெற்று துடுப்பாட்டத்தினை மட்டு எவகிறீன் கழகம் தேர்வு செய்திருந்தது. இருபது ஓவர்கள் நிறைவில் பதினொரு விக்கெட் இழப்பில் 96 ஓட்டங்களை எவகிறீன் அணி பெற்றது. அதனைத் தொடர்ந்து பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய எதிரொலி, 10.5 ஓவர் நிறைவில் 97 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை தனதாக்கிக்கொண்டனர்.

இதன்போது வெற்றிபெற்ற அணியினருக்கான வெற்றிக்கேடயங்களையும் நினைவுப்பரிசில்களையும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட இந்து கலாசார அமைச்சின் கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளரும் உதவிப் பணிப்பாளருமான க.கோபிநாத், பாடசாலையின் பிரதி அதிபர் செல்வம், கிராம சேவையாளர் சுரேஸ் உள்ளிட்டவர்கள் வழங்கி வைத்தனர்.

பக்க அனுசரணை : கோட்டைமுனை விளையாட்டுக் கழகம்

Koddamunai Sports Club
Batticaloa

## இலங்கை நியூசிலாந்து டெஸ்ட் தொடர் சாதனையுடன் வெற்றி பெற்றது இலங்கை அணி



இலங்கை நியூசிலாந்து அணிகளுக்கிடையில் காலியில் இடம்பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி 6 விக்கட்டுக்களால் சாதனை வெற்றி பெற்று தொடரில் 1:0 என்ற ரீதியில் முன்னிலை வகிக்கின்றது.

கடந்த 14-ம் திகதி ஆரம்பமான இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

**யாசீர் அரபாத்**

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி 249 ஓட்டங்களை பெற்றுக்கொள்ள, பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 267 ஓட்டங்களை பெற்று, 18 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது. இதனைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸுக்காக களமிறங்கிய நியூசிலாந்து அணி 285 ஓட்டங்களை பெற்று 268 என்ற சவாலான ஓட்ட எண்ணிக்கையை வெற்றியிலகக்காக நிர்ணயித்தது. நியூசிலாந்து அணி சார்பாக பிஜே வெட்லிங்கின் 77 ஓட்டங்களை பெற்றார்.

வெற்றியிலக்கினை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி, அணித் தலைவர் திமுத் கருணாரத்ன மற்றும் லஹிரு திரிமன்னே ஆகியோரின் அரைச் சதங்களின் உதவியுடன் நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட்டிழப்பின்றி 133 ஓட்டங்களை பெற்றிருந்தது.

வெற்றி இலக்கை அடைய மேலதிகமாக 135 ஓட்டங்கள் தேவை என்ற நிலையில் இறுதி நாளில் களமிறங்கிய இலங்கை அணி 4 விக்கட்டுக்களை மாத்திரமே இழந்து இலக்கினை அடைந்து காலி மைதானத்தில் நான்காவது இன்னிங்ஸிற்காக அதிக பட்ச வெற்றி இலக்கை அடைந்து சாதனை வெற்றியினை தனதாக்கியது.

இலங்கை அணி சார்பாக அணித்தலைவர் திமுத் கருணாரட்ன 122 ஓட்டங்களை பெற்று ஆட்ட நாயகனாக தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி டெஸ்ட் சம்பியன்சிப் தொடரில் 60 புள்ளிகளை பெற்றுக்கொண்டது.

## 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற குமார் சண்முகேஸ்வரன்




கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் கடந்த வாரம் இடம்பெற்ற 97 ஆவது தேசிய மெய்வல்லுநர் போட்டியின் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் ஹட்டனைச் சேர்ந்த குமார் சண்முகேஸ்வரன் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கத்தினை சுவீகரித்தார்.

**யாசீர் அரபாத்**

ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்ற இராணுவத்தைச் சேர்ந்த குமார் சண்முகேஸ்வரன் போட்டித் தூரத்தை 31.47 நிமிடங்களில் ஓடி முடித்து முதலிடம் பிடித்தார். இதன்மூலம் இவ்வருட இறுதியில் நேபாளத்தில் நடைபெறவுள்ள தெற்காசிய விளையாட்டு போட்டியில் கழந்துகொள்வதற்கான தகுதியினையும் பெற்றுள்ளார்.

# ஸ்ரைலு ஸ்ரைலு தான்

" யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு பஸ்சில் போய்க் கொண்டிருக்கிறேன்.

கனகராயன்குளச் சந்தியில் 10 ஆரம்ப வகுப்பு மாணவர்களும் 2 ஆசிரியைகளும் ஏறுகின்றனர்.அவர்கள் புளியங்குளம் சந்தியில் இறங்கினார்கள்.

ஒரு மாணவன் தனது சேட், காற்சட்டை என்பவற்றைச் சரி செய்ததுடன் தலையையும் கைகளால் தட்டி சரி பார்த்துக் கொண்டான்.ஏனையோர் வெகுசாதாரணமாகப் போக இந்தப் பையன் மட்டும் வெகு ஸ்ரைலாக நடந்தும் தனது அழகைச் சரி பார்த்தும் நடந்து போனான். ஸ்ரைல் ( Style ) என்பது மனிதருடன் கூடவே பிறக்கும் ஒன்று போல உள்ளது..

ஸ்ரைல் நடிகர் என்றவுடன் சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந்த் தான் கண்ணில் தெரிவார். கர்நாடகாவின் பெங்களூர் நகரில் பஸ் கொண்டக்ரராக இருந்து ஸ்ரைலாகச் சிகரெட் பிடித்த அவரை இயக்குநர் பாலசந்தர் தமிழ் சினிமாவுக்குக் கொண்டு வந்தார். தமிழ் சினிமா நிறையவே ஸ்ரைலைக் கற்றுக் கொடுத்தது. அவரது ஸ்ரைல் பலகோடி இளைஞர்களுக்கு ஸ்ரைலைக் கற்றுக் கொடுத்தது.

1988 இல் கமலஹாசனின் சத்யா என்ற படம் வந்தது. அதில் கமலஹாசன் தாடி மீசையுடன் இணைந்ததாக தலைமுடியையும் ஒரே அளவில் வெட்டினார். அதைப் பார்த்த இளைஞர்கள் சத்யா கட் எனத் தலைமுடியை வெட்டினார்கள்.

1970 களில் பெல்ஸ் எனப்பட்ட நீளக் காற்சட்டை போடும் ஸ்ரைல் வந்த போது, அதைப் பார்த்து இளைஞர் கூட்டமே பெல்ஸ் தைத்துப் போட்டது. அதை பெல்போட்டம் உடுப்பு எனவும் அழைத்தார்கள்.

அது போல நதியா என்ற நடிகை 1980 களின் மத்தியிலும் 1990 களின் முற்பகுதியிலும் கொடி கட்டிப் பறந்த போது எமது பெண்கள் நதியா கொண்டை, நதியா உடுப்பு, நதியா சாறி என நதியா மயமாக நின்றார்கள்.

1960 களிலும் அதன் பின் வந்த தலைமுறையும் எம்.ஜி.ஆர், சிவாஜி ரசிகர்களாக இருந்து அவர்களது பாணியில் நடையுடை வைத்துக் கொண்டார்கள்.

1980 களில் டிஸ்கோ ( Disco ) என்றொரு சொல் பிரபலமாக இருந்தது. டிஸ்கோ சேட், டிஸ்கோ ஜீன்ஸ், டிஸ்கோ தோடு என யாவும் டிஸ்கோ மயமாக இருந்தது. தமிழில் டிஸ்கோ சாந்தி என ஒரு நடிகையும் இருந்தார். டிஸ்கோ டான்ஸ் எனப் பிரபலமாகப் பேசப்பட்ட டான்ஸ் வகையும் இருந்தது.

இன்றைய நாள்களில் இணையம், சமூகம் வலைத் தளங்கள் ஊடாக ஸ்ரைல்கள் நிமிடத்திற்கு நிமிடம் இம் மண்ணை எட்டிப் பார்க்கிறது. அவலட்சணமாக பிறருக்குத் தெரிவதை லட்சணமான ஸ்ரைல் என நினைக்கும் இளவட்டங்கள் தான் அதிகம்.
காதில் தோடு, குஞ்சுக் காற்சட்டை என்ற ஜம்பர், கை விரலுக்கு வெள்ளியில் மோதிரம் தலைமுடிக்கு ஜெல்பூசுதல் எனத் திரிவது இந்தக் காலத்து ஸ்ரைலாகி விட்டது.

பாடசாலை நாள்களிலும் ஸ்ரைல் காட்டி ஆசிரியர்களிடம் தண்டனை பெற்ற மாணவர்களும் இருந்தார்கள். இப்போதும் இருக்கிறார்கள். எடுவையாக, ஸ்ரைலாக வருபவர்களுக்கு அவர்களது பெயருடன் லெவல் சிறி, எடுவை சிறி எனவும் வைத்தார்கள்.

இன்று பாடசாலைகளில் மாணவர்களது சீருடை, தலைமுடி எவ்வதம் அமைய வேண்டுமென சுற்றுநிருபம் அடித்து விடுமளவுக்கு ஸ்ரைல்களால் ஒழுக்கப் பிரச்சினை வருகிறது.

1980 கள் வரை உயர்தர வகுப்பு

**வேதநாயகம் தபேந்திரன்**

மாணவர் ஜீன்ஸ் எனப்பட்ட நீளக் காற்சட்டை போடுவது கட்டாயமான தாக்கப்படவில்லை. அப்போது காற்சட்டை போட்டுப் படித்து பல்கலைக்கழகம் சென்றார்கள்.

உத்தியோகம் பார்க்கச் சென்ற போது தான் ஜீன்ஸ் எனப்பட்ட நீளக்காற்சட்டை போட்டவரும் இருந்தார்கள்.

1950 களும் அதற்கு முன்னரும் ஆங்கில மொழியை நன்றாகப் பேசக் கூடிய ஆண்கள்மட்டுமே நீளக் காற்சட்டை அணிந்தார்கள். அதுவும் வைற் அன்ட் வைற் எனப்பட்ட வெள்ளை நிறத்திலான சேட்டும் நீளக் காற்சட்டையும் அணிந்தார்கள். அதனால் நீளக் காற்சட்டையைப் போடுவதற்குத் தயங்கினார்கள்.

1970 களின் பின்னர் இந்த நிலை தலைகீழாக மாறியது. யாவரும் அணியத் தொடங்கினார்கள்.

ஒரு காலத்தில் கூலி வேலைக்குச் செல்வோர் சாறம் கட்டித் தான் செல்வார்கள். இப்போது ஜீன்ஸ் எனப்பட்ட நீளக் காற்சட்டை போடுவது சர்வசாதாரணம். தென்பகுதிச் சிங்களவர்கள் சப்பாத்து, ஜீன்ஸ் முழுநீளக் காற்சட்டை அணிந்து ரிப்ரொப்பாக அரச வேலைக்குச் செல்வார்கள்.

அங்கு சாதாரண உத்தியோகம் பார்க்கும் ஒருவர் கூட வலு ஸ்மாட்டாகத் தான் செல்வார்கள். ஆனால் இங்கு யாழ்ப்பாணத்திலோ, மட்டக்களப்பிலோ அரச உயரதிகாரிகள் தவிர ஏனையோர் சப்பாத்துப் போட்டு முழுநீளக் கையுள்ள சேட்டுப் போட்டு ஸ்மாட்டாக வருவது குறைவு தான். இப்போது கொஞ்சம் பறவாயில்லை.

டாங் டாங் சேட், மார்ட்டின் சேட். கொட்றொய்ல் துணியாலான ஜீன்ஸ், டெனிம் ஜீன்ஸ் கறா துணியில், ஜீன்ஸ் என இளைஞர்களது ஸ்ரைல் ஒரு வகை.

மார்ட்டின் சேர்ட்டைத் தவிர வேறு சேர்ட் போட மாட்டேன் என்று இன்று வரை பிடிவாதம் பிடிக்கும் ஓர் நண்பர் உள்ளார்.

காலத்திற்குக் காலம் ஆடை வகைகளின் ஸ்ரைல்கள் மாறும்.

மின்சாரம் இல்லாத காலத்திலும் கூட சிரட்டை எரித்து இரும்பு அயன்பொக்சில் அயன்பண்ணி உடுப்புப் போட்ட ஸ்ரைல் மன்னர்களும் இருந்தார்கள்.

பவுடர்,சீப்பு மட்டும் விற்ற கடைகள்



இன்று பெயார் அன்ட் லவ்லி உட்பட பல அழகுசாதனப் பொருள்கள் விற்பது சாதாரண ஒன்றாகியது. ஃபான்சி கடை மூலைமுடுக்கெங்கும் வந்து விட்டது.

ஜீன்சும், சேட்டும் அணிந்து திரிந்த ஒருவர் அரசியலுக்கு வரும் போது வேட்டி கட்டுகின்றார்.

மக்கள் பிரதிநிதியானவுடன் 24 மணி நேரமும் வேட்டியுடன் தான் நிற்பார். இது அரசியல் ஸ்ரைல்.

புலம்பெயர் தேசத்து எம் உறவுகள் வரும் போது தமது ஸ்ரைலுக்கெனத் தனியாக ஒரு சின்ன பையில் பலவகைக் கிறீம்கள் கொண்டு வருவார்கள். இங்கு அவர் தம் உறவுகளுக்கு இலவச உபயமாகக் கிடைக்கும்.

1983 இற்குப் பின்பாக விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பொதுமக்கள் மத்தியில் உலாவிய காலத்தில் இயக்க ஸ்ரைல் வந்தது.சோக்கோ ஜீன்ஸ் அணிந்து செக் செக் சேட் அணிந்து சேர்ட்டை ஜீன்சுக்கு வெளியே விட்டால் விடுதலைப் புலிகள் உறுப்பினரெனத் தம்மை அடையாளம் காட்ட விருப்பம் கொண்ட ஸ்ரைல் இளைஞர்கள் இருந்தார்கள்.தாடி வைத்து கடும் கலரில் சேட் அணிந்தால் ஈபிஆர்எல்எவ். டெனிம் சேட் அணிந்தால் ரெலோ.பீபீ பாக், ஏசியா சைக்கிளில் கிப்ஸ் சாறத்துடன் ஓர் இளைஞன் பீபீ ( Bag)பாக் கொண்டு சென்றால் அதுவும் இயக்க ஸ்ரைல். உண்மையான இயக்க உறுப்பினரின் பீ பீ பாக்கினுள் என்ன இருக்குமென்பது சொல்லாமலே தெரியும்.

இதனைப் போல பாசாங்கு காட்டும் இளைஞர்களும் இருந்தார்கள். பேசியல் (Facial ) இல்லாமல் திருமணம், மங்கைப் பருவ நீராட்டு விழா எதுவுமேயில்லையென்ற ஸ்ரைல் யுகத்தினுள் வந்து விட்டோம்.

அழகான பெண்ணுக்கு பேசியல் செய்ய வரும் அழகு குறைந்த பெண் பெரும்பாலும் பெண்ணை அவலட்சணமாக்கி விட்டே போவார்.

சாதாரண கொண்டாட்டங்களுக்குப் போக அதற்கென பிரத்தியேகமாக அழகுசாதனப் பொருள்களை வாங்கி வைக்கும் ஸ்ரைல் குயின்களும், பிறின்ஸ்களும் பரவலாக உள்ளனர்.

பேசியலுக்கு நேரத்தைச் செலவிட்டு சுபநேரத்தைக் கோட்டைவிடுவோருமுள்ளனர்.

பேசியல் பணம் உழைக்கும் தொழிலாகியது. அதற்கென கற்கை நெறிகளும் ஊருக்கு ஊர் வந்து விட்டது.

வீடியோ, போட்டோக்காரர்களின் ஸ்ரைலுக்கு நாட்டியமாடுவதாக மங்கல நிகழ்வுகள் ஆகிப் போனது. அவர்களும் புதுசு புதுசாக ஸ்ரைலுகளைக் கொண்டு வந்து அடுத்தவர் நேரத்தை விழுங்குவார்கள்.

அலுவலகங்களில் வோஸ்றூம்( Wash room ) வந்தது. பிற்பகல் 3.30 மணியென்றவுடன் அங்கு சென்று முகம் கழுவி பெயார் அன்ட் லவ்லி பூசி அழகு பார்த்து, 4.15 மணிக்கு வீடு செல்லும் வனிதையர்களின் ஸ்ரைலும் உண்டு.

தலைமயிர், மீசைக்கு டை பூசாதோரை விரல் விட்டு எண்ணலாம். பெட்டிக் கடையிலும் கூட தலைக்கு டை பூசும் பக்கெற்றுகள் விற்பனையாகின்றது. சலூன்களில் தலைமுடி வெட்டி டை பூசி விடத் தனி றேற். நரைமயிருள்ள மனிதர்களை இனி மியூசியத்தில் தான் தேட வேண்டும். உடல் நிறத்தில் வெள்ளை வேண்டும். ஆனால் தலைமுடி கறுப்பு தான் வேண்டும். ஜெல் பூசுவோருமுண்டு.

பெண்கள் இமை சேப் செய்து அழகு காட்டும் ஸ்ரைலும் பரவி விட்டது.. அதற்கென சலூன்களில் தனி றேற்.

ஒருக்கால் உடுத்த சாறி அடுத்த முறை உடுக்காத பெண்கள் தொகை கூடி வருகிறது.கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்ற தலைமுறை போனது. மாதத்திற்கொரு புத்தாடை எடுப்பது விந்தையானதல்லவென வந்தது.எந்த நேரமும் பொக்கற்றில் சீப்பு வைத்திருந்து அடிக்கொரு தடவை இழுக்கும் ஸ்ரைல் மன்னர்களும் உள்ளனர்.சைவ முறைத் திருமணங்கள் யாவும் பிளவர் கேள் ( Flower Girl ) வைத்து கிறிஸ்தவம் கலந்து விட்டது ஒரு ஸ்ரைல்.

வெடிங் கேக், சாமத்திய வீட்டுக் கேக் என புதுப்புது சம்பிரதாயங்கள் வேறு ஒரு ஸ்ரைல். பத்து திருவிழாவுக்கு இருபது சாறி எடுத்து காலை,மாலை என புதுசு கட்டும் கலாசாரமும் பணம் மெத்தின ஸ்ரைல்.

திருமணமண்டபத்துக்கு மண்டபம், வீடியோக்காரனுக்கு வீடியோக்காரன் போட்டிக்கு வர புதுசு புதசாக ஸ்ரைலுகள் முளைக்குது பாருங்கோ.


ஒரு நாளில் நாலு மண்டபத்துக்கு ஓட வேண்டிய அவதியுள்ளவர்களின் நேரத்தை விழுங்குது பாருங்கோ.

மூத்தோருக்கு செம்பு கொடுத்து எழுப்பி வாழையிலையில் சாப்பாடு கொடுத்த பாரம்பரியம் யாவும் ஹோலுக்கு வந்து பறிபோனதும் இந்த ஸ்ரைலு ஸ்ரைலுவால் வந்த வினை பாருங்கோ.

வேட்டி கட்டிய உத்தியோகத்தர் தலைமுறை விடைபெற்றது. மங்கல நிகழ்வுக்குப் போய் வேட்டியுடன் அலுவலகம் சென்றால் ஸ்ரைலாக இல்லையே என்ற நையாண்டியும் வருகிறது.

இப்பிடியே பாருங்கோ ஸ்ரைலு ஸ்ரைலு பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம் .

விடுபட்ட ஸ்ரைல் இருந்தால் நீங்கள் சொல்லுங்கோ......



# இமாலய சாதனை புரிந்த "தேனகச் செம்மல்" செ.இராஜதுரை

*அத்தியாயம்-14*

கலாபூசணம் அரங்கம் இரா. தவராஜா

## பேச்சுத்துறையில் இராஜதுரை:

சென்ற இதழ்களில் அவரின் பேச்சுத் திறமையைப் பற்றி அவர் மீது அன்பு செலுத்தியவர்கள் பேசிய பேச்சை தந்திருந்தேன். இனி சொல்லின் செல்வன் அவர்களின் உரைகளைத் தொடர்கிறேன்.

மட்டக்களப்பு வின்சன்ட் மகளீர் பாடசாலையில்:

திரு.செ.இராஜதுரை அவர்கள் 05.03.1954ல் ஆற்றிய சொற் பொழிவு "பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்". இதை முதலில் தருகிறேன்.

தலைவர் அவர்களே! சகோதர சகோதரிகளே!! நேற்று மதியம் இந்நேரம் இருக்கும் உங்கள் தலைவியார் அவர்கள் தங்கள் தமிழ் இலக்கிய சங்கத்தில் ஒரு சொற்பெருக்காற்றுமாறு என்னைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களுடைய வேண்டுகோளைப் புறக்கணிக்காது ஏற்றுக் கொண்டு 'எதைப்பற்றி நான் பேச வேண்டும்' எனக்கேட்டபோது எதைப் பற்றியாவது பேசுங்கள் என்ற அனுமதியும் தந்தார்கள். இப்போதெல்லாம் நம்மில் பலர் எதைப்பற்றியாவது பேசிக் கொண்டு எதுவித குறிக்கோளுமின்றி வாழ்வதிலேயே நாளைக் கடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பாடசாலை மதிற்சுவர்களுக்கு மத்தியில், பாலத்துக்கம்பிகளில், விளையாட்டு மைதானங்களில், கடைத் தெருக்களில், சினிமாக் கொட்டகைளில், கடற்கரைகளில் இப்படி எங்கு பார்த்தாலும் எவரும் எதை எதையோ பேசிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களுடைய பேச்சுக்கள் ஆடிக்காற்றில் அள்ளுண்டு வரும் குப்பை கூளங்களைப்போல, காய்ந்த சருகுகளைப்போல ஒன்றுக்கும் உபயோகமற்றவையாய் போய் விடுகின்றன.

அத்தகைய பேச்சுக்களால் நமக்கும் பிரயோசனமில்லை, நாட்டுக்கும் நன்மை இல்லை. காட்டாற்று வெள்ளத்தில் அள்ளுப்பட்டு வரும் வண்டல் மண்ணைப் போல பேச்சுக்களும் அம் மண்ணிலே அதன் கருத்துக்களும் மக்கள் மனதில் நல்லென செய்வனவாய் அமைய வேண்டும். கள்ளிச் செடியைப் போலல்லாது கற்பூரவள்ளிச் செடியைப் போல பேச்சுக்கள் உபயோக முள்ளவையாய் அமைய வேண்டும்.

உங்கள் தமிழ் இலக்கிய சங்கத்தில் இதுவரை பலர் வந்து பேசிச்சென்றிருப்பார்கள். பண்டிதர்கள், பட்டதாரிகள், பாடசாலை அதிபர்கள் தமது கருத்துக்களை உங்கள் முன் வெளியிட்டு இருப்பார்கள்.

அத்தகைய தகைமை எதுவும் என்னிடம் கிடையாது. உங்கள் தலைவியார் எமக்கு அளித்திருக்கும் அனுமதியை அதிலும் விசேஷ அனுமதியை வைத்துக் கொண்டு நீங்கள் கேட்டால் என்ன என்று எதையாவது நான் உளறி விட்டு போய் விடலாம். பகிரங்கப் பொதுக் கூட்டமானால் பேச்சாளரின் பேச்சைக் கேட்கச் சகிக்காதவர்கள் எழுந்து போய் விடுவார்கள். வேறு சிலர் கைகளைத் தட்டியும் சீட்டியடித்தும் பேச்சாளரை மேடை மீது உட்காரச் செய்து விடுவார்கள். உங்களால் அப்படி ஒன்றும் செய்து விடமுடியாது.

சிறைச்சாலை மதிற் சுவர்களுக்குள் அடங்கிக் கிடக்கும் கைதிகளைப் போல மாணவ மாணவிகள் பாடசாலை வகுப்பறைக்குள்ளும் பாடத்திட்டங்களுக்கும் அடங்கி நடக்க வேண்டியவர்கள். இதை மனதில் வைத்துக் கொண்டு எதையாவது அழைத்ததற்காக பேசி விட்டுப் போவோமென்று பலர் எண்ணி வருவதுண்டு.

விளங்காத ஒரு எண்கணக்கின் விபரங்களை பலமுறை ஆசிரியரிடம் கேட்டு விளக்கம் பெற நீங்கள் முயலுவதைப்போல உங்கள் சிந்னையில் முற்றுப் பெறாதிருக்கும் பொருள்கள் பிரச்சினை மக்கள் முன்னேற்றத்திற்கு வேண்டிய கருத்துக்கள் மறுமலர்ச்சித் தூதுவர்கள்- அவர்கள் மக்களிடையே வாங்கிய பழிச்சொற்கள், உலகைத் திருத்திய உத்தமர்கள்- அவர்கள் பட்டஅடி உதைகள், பெண்குலத்துக்குப் பெருமை ஈட்டித் தந்த தாய்மார்கள் இவை பற்றி எல்லாம் பேசுமாறு நீங்கள் கேட்க வேண்டும்.

அத்தகைய பேச்சுக்களில் உங்கள் மனதில் தோன்றும் சந்தேகங்கள் தொங்கிக் கொண்டிருக்கும் சிக்கல்கள் புரியாத புதிர்கள் ஆகியவற்றை நீங்கள் துணிந்து அவர்களிடம் வினவவேண்டும். விளக்கம் கோர வேண்டும். ஒரு வெற்றுப் பேச்சு மேடையாக உங்கள் சங்கம் நிலவுவதை விடுத்து ஆராய்ச்சி நிலையமாக விளங்குவதை நான் பெரிதும் விரும்புகின்றேன்.

இப்போது கூட நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பும் ஏதாவதொரு பொருளைப் பற்றி பேசுமாறு நீங்கள் பணித்தால் அந்த பொருளின் பேரில் பேச நான் ஆயத்தமாய் இருக்கிறேன் என்று உங்களுக்குச் சொல்கிறேன். உங்கள் சிந்தனை ஆற்றலையும் திறமையையும் என்னைவிட தங்கள் தலைவியார் அதிகம் தெரிந்திருக்கும் காரணத்தினாலோ என்னவோ தெரியாது எதைப் பற்றியாவது பேசுங்கள் எனக் கேட்டுக் கொண்டார் என நினைக்கிறேன். பேச்சாளர் எதைப் பற்றி பேசினாலும் என் மாணவிகள் அப்பேச்சிலுள்ள நல்ல கருத்துக்களை மட்டும் கிரகித்து எடுத்துக் கொள்வார்கள். நீரை ஒதுக்கி அன்னம் பாலைப் பருகுவதைப்போல என்ற துணிவுதான் என்னை எதைப் பற்றியாவது பேசுங்கள் என்று எனக்கு அனுமதியளிக்கச் செய்தாரோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

இது வள்ளுவப் பெரியாரின் அழியா அமரவாக்கு. எவர் எதைச் சொன்னபோதிலும் அவற்றிலுள்ள

தொடர்ச்சி பக்கம்..15

# மாணவர் கட்டுரை
# மாறுமோ இந்த நிலை?



ஆணுக்கு நிகர் பெண் என்றிருக்கும் இக் காலகட்டத்திலே சீதனம் மட்டும் போதும் எனும் நிலையில் பெரியதொரு மாற்றம் நிகழ்கிறது. நம் நாட்டு பெண்கள் பாரதி கண்ட கனவை நனவாக்கியும் பாரினிலே தம் மழலைகள் நலம் பெற திட்டங்கள் தீட்டியும் இல்லறத்தில் இணையும் வரை சட்டங்கள் காத்தும் புதுமைப் பெண் என்று புறத்திலே பேசிவிட்டு பேரம் பேசுவதை மட்டும் நிறுத்தவில்லை.

மணமாலை சூடும் வயது வந்துவிட்டால் பணமாக எவ்வளவு தருவீர்கள்? வீடு காணி உள்ளதா? என்றுதான் முதலில் கேட்கின்றார்கள்.

பேசாத பெண்ணை பேச வைத்து அவளை பேதலிக்க வைத்து காசுதான் வேண்டும் என்றில்லை. காசும் வேண்டும் தானே என்று சொல்லி சின்னதாய் ஒரு வீடு, கொஞ்சம் நகை, வாகனம் இவ்வளவும் போதும் என்கிறார்கள்.

அனைவர் மத்தியிலும் சீதனத்துக்கான எதிர்ப்பு நிலவிக் கொண்டிருக்கும் போதிலும் வாங்குபவர்களும் கொடுப்பவர்களுக்கும் குறைவே இல்லை.

இது தன்னந்தனியே ஒரு பெண்ணுக்கான பிரச்சனை மட்டுமல்ல ஆண்களும் முக்கிய இடம் பெறுகின்றனர்.

தந்தையானவன் தன் மகளை திருமணபந்தத்தில் இணைத்து வைக்க பெரும் பாடுபடுகின்றான். அண்ணன் தனது தங்கையினை கரை சேர்க்க சீதனத்தை எதிர்பார்த்து நிற்கிறான். ஒரு மீழ்சுழற்சியின் அடிப்படையிலே இது தொடர்ச்சியாக நிகழ்கிறது.

**சி.ஜெனுஷா, கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**திருகோணமலை வளாகம்**

பலர் சீதனப்பிரச்சனையால் தங்களது உறவுகளை கரை சேர்க்க முடியாத நிலையில் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். அது மட்டுமல்லாமல் பிரம்மச்சாரிகளாகவும் முதிர்கன்னிகளாகவும் வாழ்கின்றனர். அத்துடன் காலம் கடந்து திருமணம் செய்து குழந்தை பாக்கியம் அற்றும் அவஸ்தைப்படுகின்றனர்.

பலர் கடன் தொல்லையில் மாட்டிக் கொள்கின்றனர். இது இவ்வாறு இருக்க பல பெண்கள் தனக்காக உறவுகள் கஸ்ரப்படுவதை பார்த்து வாழ்க்கையில் தவறான முடிவுகளை எடுக்கின்றனர்.

அனேகமான பிரதேசங்களில் திருமணத்தின் பின் பெண் ஆண்வீட்டுக்கு செல்வதே வழமை. ஆனால் சில குறிப்பிட்ட பிரதேசங்களில் ஆண்களே பெண் வீட்டிற்கு செல்கின்றனர். இப் பிரதேசங்களிலே அதிகளவான சீதனப் பிரச்சனை நிகழ்கிறது.

ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு சீதனப் பெறுமதி உண்டு. கேட்பதற்கு கேலியாக இருந்தாலும் சிலரது வாழ்க்கையில் கசப்பான உண்மை என்பதில் சந்தேகம் இல்லை. காதல் திருமணங்களில் கூட மறைமுகமாக சீதனம் பின்பற்றப்பட்டு வருகின்றது என்பது கசப்பான உண்மை.

கன்னியரின் பாதுகாப்பு கவசமாக விளங்கும் கல்யாண வாழ்விலே சீதனம் என்னும் சிக்கலான விடயமாக, கட்டுப்படுத்த முடியாத நோயாக இருக்கின்றது. முதுகெலும்பு இல்லாதவர்களின் முகவரி என்று இழிவாக மக்கள் மத்தியில் பேசப்பட்டு வந்தாலும் சிலருக்கு பெருமையாகவும் உள்ளது. சீதனம் வாங்காவிட்டால் தன் மரியாதை குறைந்துவிடுமோ என்று அச்சப்படுபவர்களும் உண்டு.

எதிர்மறையான சிந்தனைகளை முதலில் நாம் அகற்ற வேண்டும். சீதனம் எனும் பதம் ஆண், பெண் பேதமற்று அனைவரையுமே பாதிக்கின்றது. சீதனத் தீயிலே மூழ்காமல் குணமான துணைவியிடம் பணத்தை எதிர்பார்க்காமல் கண்ணிலே கருணையுடன் எண்ணத்தில் தூய்மையுடன் பெண்ணைப் பார்க்க வேண்டும். இனிவரும் காலங்களிலே இதனை இல்லாதொழித்து மக்கள் மத்தியில் சம உரிமையை பேணுவோம்.

சீதனத்தை எழுத்தில் மட்டுமல்ல எண்ணத்திலிருந்தும் அழிப்போம்.

# விதியல்ல வீதி


--- படுவான் பாலகன் ---

வீணாகும் நேரம்
விபரிதமாகும் பயணம்
வீடு வந்து சேர்க்கையில்
விட்டு விலகா உடல் வருத்தம்
வீண் சாவு
விதியினால் அல்ல
வீதியின் சீரின்மையே
விரக்தியின் உச்சத்தில் படுவான்
மக்கள்



# லெமூரியா குமரிக்கண்டம் என்பது ஒரு கற்பனை

சார்லஸ் ராபர்ட் டார்வின் (Charles Robert Darwin – 1809 -1882) என்பவர் ஓர் ஆங்கிலேய இயற்கையியல் அறிஞர் ஆவர். இவர் முன்வைத்த உயிரினங்களின் படிமலர்ச்சிக் கோட்பாடு (Theory of Evolution) அதுவரை நம்பி வந்த படைப்புப் பற்றிய கோட்பாட்டைப் புரட்டிப் போட்டது. படிமலர்ச்சிக் கோட்பாடு என்பது ஓர் அடிப்படையான புரட்சிகரமான அறிவியற் கொள்கை ஆகும். டார்வின் தாம் கண்டுபிடித்த உண்மைகளையும், கோட்பாடுகளையும், 1859 ஆம் ஆண்டில் உயிரினங்களின் தோற்றம் (The Origin of Species) என்னும் தலைப்பில் ஒரு நூலாக வெளியிட்டார். இவர் கடல் வழியே, எச்எம்எஸ் பீகிள் (HMS Beagle) என்னும் கப்பலில், உலகில் பல இடங்களுக்கும் சென்று, குறிப்பாக காலபாகசுத் தீவுகளுக்குச் சென்று உயிரினங்கள் பற்றி ஆராய்ந்தார்.




Charles Robert Darwin

படிமலர்ச்சிக் கருதுகோள் (Theory of Evolution) நீர்வாழ்வன, நிலத்தில் ஊர்வன, மேலே பறப்பன போன்ற உயிரினங்கள் தாமாகவே தோன்றின, அவை இன்றுள்ளது போல யாராலும் படைக்கப்படவில்லை என்பதை இது நிறுவியது.

குரங்கில் இருந்து மனிதன் மேலும் நாம் காணும் உயிரினங்களின் உருவம் தொடக்க காலத்தில் இருந்தே வரவில்லை. அவை ஒற்றைக் கலம் (single cell) உயிரியிற் தொடங்கி இடையறாத மாற்றம், படிமுறை வளர்ச்சி, மலர்ச்சி, இனப் பெருக்கம், இடப்பெருக்கம், இயற்கைத் தேர்வு (Natural Selection) நிலத்தின் தன்மை, சூழல் முதலியவற்றுக்கு ஏற்ப வாழ்க்கைத் தேவையை நிறைவு செய்தல் காரணமாக உருமாற்றம் அடைந்து வந்துள்ளன.

இன்று நாம் காணும், மரம், செடி, கொடிகள் கடலில் இருந்து கரையில் விழுந்த சிறு சாதாளையின் படிமலர்ச்சி ஆகும். மனிதனை எடுத்துக் கொண்டால் அவன் "முழுசாகக் கடவுளால் படைக்கப்படவில்லை, மண்ணின் செழுமையால் ஒன்று கூடி உண்டான உயிரணுக்களின் படிமலர்ச்சியே மனிதன். அதாவது பூச்சியாய், புழுவாய், நத்தையாய், மீனாய், பறவையாய், குரங்காய் வளர்ந்து இறுதியில் அவற்றின் திருத்த உருவமாய் மனிதன் தோன்றினான் என டார்வின் படிமலர்ச்சிக் கோட்பாடு மூலம் நிறுவினார். மனிதன் ஊர்வன நிலையைக் கடந்து நாலு காலால் நடக்கும் குரங்கு நிலை எய்திப் பின்னர் வளைந்த முதுகை நேர் நிமிர்த்தி நாலு கால்களில் இரண்டைக் கைகளாகப் பயன்படுத்தி மீதி இரண்டு காலால் நடக்கக் கற்றுக் கொண்டு மரக் கொப்புகளுக்குப் பதில் குடிசை கட்டி சிற்சில கருவிகளைச் செய்து வாழப் பல இலட்சம் ஆண்டுகள் எடுத்தன என டார்வின் விளக்கினார்.

உலகத்தையும் அதிலுள்ள உயிர்களையும் கடவுள் படைத்தார், அரைகுறையாக அல்ல ஒவ்வொன்றையும் முழுதாகவே படைத்தார், அதே போல் ஆறறிவு படைத்த ஆணையும் பெண்ணையும் கடவுளே படைத்தார் என்றும் மதங்களும் மதவாதிகளும் சொல்லி வந்த படைப்புக் கோட்பாட்டை டார்வினின் படிமலர்ச்சிக் கோட்பாடு தகர்த்து எறிந்தது.

டார்வினின் படிமலர்ச்சிக் கோட்பாடு உயிரினங்கள் தம் நிலை பேற்றுக்காகப் போராடுகின்றன, இறுதியில் தகுதியுள்ளவை மட்டுமே தப்பிப்பிழைக்கின்றன (The Struggle for Existence of the Fittest) எனக் கூறியது. (தக்கன பிழைத்தல்).டார்வினது படிமலர்ச்சிக் கோட்பாடு பல அறிவியல்வாதிகளின் சிந்தனையில் பலத்த மாற்றத்தை உண்டாக்கியது. அதில் ஒருவர் விலங்கியல் அறிஞர் பிலிப் சிலேட்டர் (Philip Sclater) ஆவார்.

1860 களில் தனது கள ஆராய்ச்சியில் அவர் ஒரு புதுமையைக் கண்டார். மடகஸ்க்கரில் காணப்பட்ட குரங்கு இனத்தை ஒத்த ஒரு இனம் அதனைச் சுற்றியுள்ள தீவுகளில் காணப்படவில்லை.



Philip Sclater

ஆனால் அந்தக் குரங்கு இனத்தின் தொல்லுயிர் எச்சங்கள் இந்தியா, இன்றைய பாகிஸ்தான் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் காணப்பட்டன. மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆபிரிக்க நாடுகளில் காணப்படவில்லை. இந்த முரண்பாட்டின் அடிப்படையில் பிலிப் சிலேட்டர் 1864 இல் ஒரு கோட்பாட்டை முன்மொழிந்தார். 'மடகஸ்கரின் பால்குடிகள்' என்ற அவரது கட்டுரை காலாண்டுக்கு ஒரு முறை வெளிவரும் அறிவியல் ஏட்டில் (Journal of Science) இல் வெளிவந்தது. அதில் இந்தியாவில் இருந்து மடகஸ்க்கர் வரை இந்திய சமுத்திரத்தில் ஒரு பெரிய கண்டம் இருந்திருக்க வேண்டும் என எழுதியிருந்தார். அவரால் அனுமானிக்கப்பட்ட அந்தக் கண்டத்துக்கு லெமூரியா எனப் பெயர் இட்டார். அது அறிவியல் சமூகத்தில் ஓரளவு ஒப்புதலைப் பெற்றிருந்தது.

பிலிப் சிலேட்டர் காலம் இந்தப் புவித்தட்டுக் கட்டுமானவியல் மற்றும் கண்டங்களின் நகர்வு பற்றி யாரும் அறிந்திராத (During his time the scientific concepts of plate tectonics and continental drift were not known ) காலம்.

பிலிப் சிலேட்டரின் முன்மொழிவு அறிவியல் கற்பனைக் கதைகள் எழுதுவோர் மத்தியில் பிரபலமானது. அப்படியான கற்பனைக் கதைகளைப் படிக்கும் வாசகர் மத்தியிலும் பெரிய வரவேற்பைப் பெற்றது.

லெமூரியாக் கண்டம் அமானுசிய சோதிடரான மடாம் ஹெலனா பிலேவற்ஸ்கி (Madame Helena Blavatsky) அவர்களாலும் பிரபல்யம் அடைந்தது. அவர் லெமூரியா கண்டத்தின் வரைபடத்தைக் கண்டதாகவும் சொன்னார். பிரமஞானி வில்லியம் ஸ்கொட் எலியட் என்பவர் 'அட்லாண்டிஸ் அண்டு லாஸ்ட் லெமூரியா தி ஸ்டோரி' ('The Story of Atlantis and Lost Lemuria') என்ற நூலை வெளியிட்டார். இந்த நூலில் விரிவாக இந்தியா மற்றும் பசிபிக் கடல் தொடக்கம் ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரைப் பிரதேசங்கள் வரை நீண்டுள்ள லெமூரியா கண்டத்தின் புவியிலை விளக்கி எழுதியிருந்தார். ஸ்கொட் எலியட் ஒரு அறிவியலாளர் அல்லது புவியியலாளர் அல்லது தொல்பொருள் நிபுணர் அல்லர்.

லெமூரியா என்ற எடுகோள் நிலவியல் மற்றும் புவித்தட்டுக் கட்டுமானவியல் பற்றிய நவீன புரிந்துணர்வு மூலமாக இன்று வழக்கற்றுப் போய்விட்டது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஐரோப்பிய அறிவியலாளர்கள் மற்றும் புவியியலாளர்கள் லெமூரியா பற்றிய எடுகோளை முற்றாக நிராகரித்தார்கள். இந்தியா மற்றும் அண்டார்டிகா இடையே புவித்தட்டுக் கட்டுமானம் இருப்பது இயற்பியல் அடிப்படையில் சாத்தியமற்றது என்றார்கள். 180 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் மடகஸ்க்கர் இந்தியாவோடு இணைந்திருந்த போது குரங்கின விலங்கு இருக்கவில்லை.




அதீத ஆர்வம் காரணமாகச் சில தமிழ் ஆர்வலர்கள் குமரிக் கண்டம் (லெமூரியா) தமிழர்கள் வாழ்ந்த இடம், அங்கிருந்து அவர்கள் இன்றைய தமிழ்நாடு முதற் கொண்டு பல நாடுகளுக்குப் புலம் பெயர்ந்தார்கள் என்று எழுதியும் காணொளி வாயிலாக ஒளிபரப்பியும் வருகிறார்கள்.

குமரிக்கண்டம் என்பது இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ள இந்தியாவின் தெற்கே இருந்ததாகக் கருதப்படும் ஒரு புராண கண்டத்தைக் குறிக்கிறது. இன்றைய குமரிமுனையின் தென்பகுதி காலத்துக்குக் காலம் ஏற்பட்ட கடற்கோள்களால் விழுங்கப்பட்டது என்பது தமிழ் இலக்கியங்களால் தெரிய வருகிறது.

"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது, பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள" எனச் சிலப்பதிகாரத்தில் தென்னவன் வாழ்த்தப்படுகிறான்.

பாண்டிய பேரரசு கடல்கோளால் அழிந்தது பற்றிய குறிப்புகளை இறையனார் அகப்பொருளில் காணமுடிகிறது. இதில் தமிழகத்தை ஆண்ட அரசர்களின் வரிசை, தமிழ் அவையில் இருந்த புலவர்களின் வரிசை முதலியன குறிக்கப்பெற்றுள்ளன. இதுபோன்ற செய்திகள் தமிழ் இலக்கியத்தில் வேறு எங்கும் இல்லை. நக்கீரரால் கூறப்பட்டிருந்த இந்தக் கருத்து முதல் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று அறியப்படுகிறது.

தமிழ்மொழி அல்லது தமிழர் சிறப்பு தொன்மையில் அல்ல தொடர்ச்சியில் இருக்கிறது. முதல் குரங்கு தமிழ்க் குரங்கு என்று நிறுவ முயற்சிப்பதில் மகிமை இல்லை.
--- நன்றி - தேனி ( நக்கீரன் )


அரங்கம் பத்திரிகையில்
விளம்பரம் செய்ய
சிறப்புத் தள்ளுபடி!
கால்பக்கம் - ரூபா 2500
அரைப்பக்கம் - ரூபா 5000
முழுப்பக்கம் -
ரூபா 10,000
சிறுவிளம்பரங்கள் -
ரூபா 200 மாத்திரமே

# கற்போம்

## விஞ்ஞானம்

குணம் சவரிராஜா


பெரும்பான்மையான எச்சைகள் பெற்றோருக்குரிய ( சந்ததி) பிறப்புரிமையே கொண்டிருந்தன, இது உடலின் நீளத்துக்கான மற்றும் சிறகின் பருமனுக்கான பரம்பரையலகுகள் ஒரே நிறமூர்த்தத்திலேயே பிறப்புரிமைக்குரிய முறையில் இணைந்துள்ளன. என்பதை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.



உரு.6.15. பழ ஈ Drosophila வில் உடல் நிறப்பரம்பரையலகினதும், சிறகுப்பருமன் பரம்பரையலகினதும் தலைமுறையுரிமை

உடலின் நிறத்துக்கான மற்றும் சிறகுப் பருமனுக்கான பரம்பரை அலகுகள் இணைந்து காணப்படுமெனினும், சில சந்தர்ப்பங்களில் அவை குறுக்குப் பரிமாற்றம் காரணமாக சுயாதீனமாக தன்வயத்ததொகுப்பையடைகின்றன. ஆகவே மேலுள்ள சோதனைக்கலப்பானது மீளச்சேர்க்கையடைந்த எச்சங்களைக் குறைந்தளவான மீடிறனில் தோற்றுவிக்கலாம்.

உதாரணமாக, Morgan இன் பரிசோதனையில் நரைநிற உடலுடன் கூடிய பதாங்கச் சிறகுகள் (Ggnn) மற்றும் கருமை நிற உடலுடன் கூடிய சாதாரணச் சிறகுகள் (ggnn) ஆகியவற்றை உடைய மீளச்சேர்க்கை தோற்றவமைப்புக்கள் (recombinant phenotypes) குறைந்த எண்ணிக்கைகளில் அவதானிக்கப்பட்டன.




உரு.6.16. பழ ஈயான Drosophila வில் உடலின் நிறத்திற்கும் சிறகுப் பருமனுக்கும் பொறுப்பான பரம்பரையலகுகளின் இணைப்பு

பிறப்புரிமையியல்புக்குரிய இணைப்பில் அவ்வப்போது ஏற்பட்ட துண்டிப்புக்களை, பெற்றோரல்லாத தோற்றவமைப்புக்களுடன் கூடிய சார்பளவில் சிறிய எண்ணிக்கையான எச்சங்களின் உற்பத்தி எடுத்துக் காட்டியது.

மனித இலிங்க நிர்ணயம் (Human sex determination)
இலிங்கமானது இலிங்க் நிறமூர்த்தங்களின் வெளிப்படுத்துகையால் நிர்ணயிக்கப்படுகின்றது. மனிதரில் ஒவ்வொரு நபரும் 22 சோடிகய் தன்நிறமூர்த்தங்களையும் ஒரு சோடி இலிங்க நிறமூர்த்தங்களையும் காவுகின்றார். ஆண் இயல்புகளை வெளிப்படுத்தும் இலிங்க நிறமூர்த்தங்களின் வகை Y நிறமூர்த்தம் எனம் பெயரிடப்பட்டுள்ளது. அடுத்தது X நிறமூர்த்தம் எனப்படுகின்றது. ஒப்பீட்டு ரீதியில் நிறமூர்த்தம் y நிறமூர்த்தத்திலும் பார்க்கப் பெரியது. அவற்றின் அமைப்பொத்த பிரதேசங்களைத் தவிர அவை இரண்டும் வெவ்வேறு இயல்புகளைக் குறியீடு செய்கின்றன. X மற்றும் y நிறமூர்த்தங்கள் சோடி சேரும்பொழுது, தனித்துமான பிரதேசங்களில் மாத்திரம் அவை அமைப்பொத்ததாகத் தங்கிவிடுகின்றன. மறுகையில் X,X சோடி சேரும் பொழுது அவையிரண்டும் ஒன்றுக்கொன்று அமைப்பொத்ததாகத் தங்கிவிடுகின்றன.

பெண்களில் புணரியாக்கச் செயன்முறையில் ஒடுக்கற்பிரிவு 100% X நிறமூர்த்தங்களைக் கொண்ட ஒருமடியமான முட்டைகளைக் கொடுக்கின்றது. ஆண்களில் உற்பத்திபண்ணப்பட்ட ஒருமடியமான விந்துகளில் அரைவாசி X நிறமூர்த்தங்களையும் எஞ்சியுள்ள அரைவாசி Y நிறமூர்த்தங்களையும் காவுகின்றன. ஆண் மற்றும் பெண் புணரிகளின் கருக்கட்டலின்போது, X நிறமூர்த்தங்களைக் காவும் முட்டை மற்றும் விந்து ஆகிய இரண்டும் சேரும் சர்ந்தர்ப்பம் ஒரு பெண் நுகம் தோன்றுவதை ஏற்படுத்துகின்றது. மறுகையில் ஒரு முட்டை, Y நிறமூர்த்தத்தைக் காவும் விந்துடன் சேர்க்கையடையும் சந்தர்ப்பம் ஒரு ஆண் நுகம்

தொடர்ச்சி... (பக்கம் -14)

# கணிதம்

திரு.எஸ்.சிவரூபன், ஆசிரியர், மட் / மமே/வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்.

## பின்னங்கள்

- சென்ற வாரம் கலப்புப் பின்னத்தை முறைமையில்லாப் பின்னமாக மாற்றிப்பார்த்தோம். இவ்வாரம் முறைமையில்லாப் பின்னத்தைக் கலப்புப் பின்னமாக மாற்றிப்பார்ப்போம்.

| முறை I | முறை II |
|---|---|
| (1) $\frac{5}{3}$ | $\frac{5}{3}$ |
| $\frac{5}{3} = \frac{3+2}{3}$ $= 1 + \frac{2}{3}$ $= 1\frac{2}{3}$ | $5 \div 3$: ஈவு 1, மீதி 2 ($5 - 3 = 2$); $\frac{5}{3} = 1\frac{2}{3}$ |
| (2) $\frac{9}{4}$ | $\frac{9}{4}$ |
| $\frac{9}{4} = \frac{8+1}{4}$ $= 2 + \frac{1}{4}$ $= 2\frac{1}{4}$ | $9 \div 4$: ஈவு 2, மீதி 1 ($9 - 8 = 1$); $\frac{9}{4} = 2\frac{1}{4}$ |

**சமவலுப் பின்னம்** : ஒரு பின்னத்தின் தொகுதி எண், பகுதி எண் ஆகிய இரண்டையும் ஒரே எண்ணால் பெருக்குவதால் **அல்லது** வகுப்பதால் பெறப்படும் பின்னமானது அப்பின்னத்தின் சமவலுப் பின்னம் ஆகும்.

$$\frac{1}{2} = \frac{1 \times 3}{2 \times 3} = \frac{3}{6} \qquad \frac{3}{5} = \frac{3 \times 2}{5 \times 2} = \frac{6}{10}$$

இங்கு $\frac{1}{2}$ என்பதன் சமவலுப் பின்னம் $\frac{3}{6}$ — இங்கு $\frac{3}{5}$ என்பதன் சமவலுப் பின்னம் $\frac{6}{10}$

$$\frac{12}{15} = \frac{12 \div 3}{15 \div 3} = \frac{4}{5} \qquad \frac{15}{25} = \frac{15 \div 5}{25 \div 5} = \frac{3}{5}$$

சமவலுப் பின்னம் $\frac{4}{5}$ — சமவலுப் பின்னம் $\frac{3}{5}$

### பின்னங்களைக் கூட்டலும் கழித்தலும்

- பகுதி எண்கள் சமனான பின்னங்களைக் கூட்டும் போது தொகுதி எண்கள் மட்டுமே கூட்டப்படும். பகுதி எண் மாறாது.
  (உ-ம்) : $\frac{2}{5} + \frac{1}{5} = \frac{2+1}{5} = \frac{3}{5}$
- பகுதி எண்கள் சமனான பின்னங்களைக் கழிக்கும் போது தொகுதி எண்கள் மட்டுமே கழிக்கப்படும். பகுதி எண் மாறாது.
  (உ-ம்) : $\frac{5}{7} - \frac{3}{7} = \frac{5-3}{7} = \frac{2}{7}$

குறிப்பு : பகுதி எண்கள் சமனற்ற பின்னங்களைக் கூட்டவோ கழிக்கவோ செய்யும் போது பகுதி எண்களைச் சமவலுப் பின்னத்தைப் பயன்படுத்திய பின்னர் கூட்டவோ கழிக்கவோ செய்யலாம். இதை அடுத்த வாரம் பார்ப்போம்.

பக்க அனுசரணை

மட்டக்களப்பு,
மெதடிஸ்த மத்திய கல்லூரி
பழைய மாணவர்கள் சங்கம்
பிரித்தானியா.

# கற்போம்

## அறிவோம் – தெளிவோம் – பகிர்வோம் – 48

### க.பொ.த. (சா/த) – தமிழ்மொழியும் இலக்கியமும்

- மட்டுநகர் யுவன் -

தமிழ்மொழியும் இலக்கியமும் I இல் உவமைத் தொடர்கள் தொடர்பாக ஒரு வினா வருவதுண்டு. அது தொடர்பாகக் கவனம் செலுத்துவோம்.

புதிய பாடத்திட்டத்துக்கமைவாகத் தமிழ்மொழியும் இலக்கியமும் பாடத்துக்கான முதலாவது பரீட்சை 2016இல் நடைபெற்றது. நாம் 2016இல், 2017இல் நடைபெற்ற பரீட்சைக்குரிய வினாத்தாளில் உவமைத் தொடர் தொடர்பாக வந்த வினாக்களை எடுத்துக்காட்டுக்காக இங்கே பார்ப்போம். (2018இல் உவமைத் தொடர் தொடர்பாக வினா வரவில்லை,)

2016

17. 'ஆற்றிலே கரைத்த புளி போல' என்னும் உவமைத் தொடருக்கு நிகரான பிறிதொரு உவமைத் தொடர்
   (1) அணை கடந்த வெள்ளம் போல (2) காட்டில் எறித்த நிலாப் போல
   (3) ஆனை வாயிற் கரும்பு போல (4) ஆனை உண்ட விளாம்பழம் போல

2017

17. பயனற்ற செயலை உணர்த்தும் உவமைத் தொடர்
   (1) அணை கடந்த வெள்ளம் போல (2) ஆனை வாயிற் கரும்பு போல
   (3) ஆற்றிலே கரைத்த புளி போல (4) ஆனை உண்ட விளாம்பழம் போல

 இங்கு வந்த வினாக்களைக் கவனியுங்கள்.
(1)உவமைத் தொடர் தரப்பட்டு, அந்த உவமைத் தொடருக்கு ஒத்த இன்னொரு உவமைத் தொடரை இனங்காணுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(2)உவமைத் தொடரின் கருத்துத் தரப்பட்டு, அந்தக் கருத்தை உணர்த்தும் உவமைத் தொடரை இனங்காணுமாறு கேட்கப்பட்டுள்ளது.
 ஓர் உவமைத் தொடர் உணர்த்தும் கருத்தை இனங்காணும் ஆற்றலையும் பெற்றிருப்பது நல்லது.

01. 'நகமும் சதையும் போல' என்னும் உவமைத் தொடருக்கு நிகரான பிறிதொரு உவமைத் தொடர்
   (1) கண்ணும் இமையும் போல (2) கீரியும் பாம்பும் போல
   (3) சித்திரப் பதுமை போல (4) ஒளியைக் கண்ட இருள் போல

02. 'ஓடும் புளியம்பழமும் போல' என்னும் உவமைத் தொடருக்கு நிகரான பிறிதொரு உவமைத் தொடர்
   (1) மதில் மேல் பூனை போல (2) ஆனை உண்ட விளாம்பழம் போல
   (3) பசுத்தோல் போர்த்திய புலி போல (4) தாமரை இலைத் தண்ணீர் போல

03. 'காட்டில் எறித்த நிலாப் போல' என்னும் உவமைத் தொடருக்கு நிகரான பிறிதொரு உவமைத் தொடர்
   (1) ஆடி ஓய்ந்த பம்பரம் போல (2) ஆற்றங்கரையில் மரம் போல
   (3) விழலுக்கு இறைத்த போல (4) ஒளியைக் கண்ட இருள் போல

04. ஒரு விடயத்தில் ஆழமாகச் செயற்படாத தன்மையை உணர்த்தும் உவமைத் தொடர்
   (1) நீர்மேல் எழுத்துப் போல (2) நுனிப்புல் மேய்ந்தது போல
   (3) கடன்பட்டார் நெஞ்சம் போல (4) பசுமரத்து ஆணி போல

05. நீதி வழங்கும் போது பக்கம் சாராமல் இருத்தல் என்பதை உணர்த்தும் உவமைத் தொடர்
   (1) மதில் மேல் பூனை போல (2) இரு தலைக் கொள்ளி எறும்பு போல
   (3) சமன்செய்து சீர் தூக்கும் கோல் போல (4)உள்ளங்கை நெல்லிக்கனி போல

06. நிலைத்திருத்தல் என்பதை உணர்த்தும் உவமைத் தொடர்
   (1) சித்திரப் பதுமை போல (2) கல்மேல் எழுத்துப் போல
   (3) சூரியனைக் கண்ட செந்தாமரை போல (4) பூவும் மணமும் போல

07. 'அத்தி பூத்தாற் போல' என்னும் உவமைத் தொடர் உணர்த்தும் பொருள்
   (1) அத்தி திடீரென்று பூக்கும். (2) அத்தி பூப்பது போல் செயல் நடக்கும்.
   (3) திடீர்த்திடீரென நடக்கும் செயல் (4) மிகவும் அரிதாக நடைபெறும் செயல்

08. 'அம்மி துணையாக ஆற்றில் இறங்கியது போல' என்னும் உவமைத் தொடர் உணர்த்தும் பொருள்
   (1) பலமுள்ள ஒருவரின் துணையுடன் ஆற்றில் இறங்குதல்
   (2) பாரம் குறைந்த பொருளுடன் செயலில் இறங்குதல்
   (3) பொருத்தமற்ற ஒன்றின் உதவியுடன் செயலில் இறங்குதல்
   (4) எவரின் துணையுமில்லாமல் செயலில் இறங்குதல்


09. 'உறையில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் அலைவது போல' என்னும் உவமைத் தொடர் உணர்த்தும் பொருள்
   (1) தமக்கு வேண்டிய ஒரு பொருள் அருகில் இருப்பதை அறியாமல் தேடியலைதல்
   (2) உறையில் இருப்பதைத் தேடிப்பார்க்காத அளவுக்குச் சோம்பேறித்தனமாய் இருத்தல்
   (3) முயற்சிசெய்யாமல் தமது நேரத்தைத் தாமே வீணடித்தல்
   (4) வெண்ணெய் பெறுமதியானது என்பதை அறியாமல் ஊர்ஊராய்த் திரிதல்

தொடர்ச்சி...

## விஞ்ஞானம்

தோன்றுவதை ஏற்படுத்துகின்றது.

இவ்வாறு கருக்கட்டலுக்கு இட்டுச் செய்லும், ஒரே இனத்தின் ஆண் மற்றும் பெண் அங்கிகளுக்கிடையே நடைபெறும் எந்த விதமான புணர்ச்சிக்குரிய சந்தர்ப்பங்களும் ஐம்பது வீதம் ஆண் அல்லது பெண் நுகங்களைக் கொடுக்கக்கூடிய வாய்ப்பினை வழங்கக்கூடியதாக உள்ளன. XX நிறமூர்த்தங்களினதும் XY நிறமூர்த்தங்களினதும் சேர்க்கையின் வெளிப்படுத்துகையின் அடிப்படையில் மனிதரில் உடலமைப்பு ரீதியான இலிங்கத்துக்குரிய அடையாளங்கள் விருத்தியடைகின்றன.



உரு.6.17. மனிதரில் இலிங்க நிர்ணயம்

மனிதரில் இலிங்கம் இணைந்த இயல்புகள் (human sex – linkled characteristics)
மனிதரில் குறிப்பிட்ட சில இயல்புகள் இலிங்க நிறமூர்த்தங்களில் இமையப்பெற்றுள்ள பரம்பரை அலகுகளின் மேல் காவப்படுகின்றன. இலிங்க நிறமூர்த்தங்களின் மேல் அமையப்பெற்றுள்ள இந்தப் பரம்பரை அலகுகள் இலிங்கமிணைந்த பரம்பரை அலகுகள் என்றும் அவற்றால் வெளிப்படுத்தப்படும் இயல்புகள் இலிங்கம் இணைந்த இயல்புகள் என்றும் அழைக்கப்படும். X நிறமூர்த்தங்களின் மேல் காவப்படும் அல்லது அவற்றால் வெளிப்படுத்தப்படும் இயல்புகள் x - இணைந்த இயல்புகள் என்றும், இந்த இயல்புகளை வெளிப்படுத்தும் அல்லது காவும் பரம்பரை அலகுகள் X - இணைந்த பரம்பரை அலகுகள் என்றும் அழைக்கப்படும். மறுகையில் Y நிறமூர்த்தங்களால் வெளிப்படுத்தப்படும் அல்லது காவப்படும் இயல்புகள் Y - இணைந்த இயல்புகள் என்றும், இந்த இயல்புகள் வெளிப்படும் அல்லது காவும் பரம்பரை அலகுகள் Y - இணைந்த பரம்பரை அலகுகள் என்றும் அழைக்கப்படும். இலிங்க சார்பற்ற ஒரு சில பரம்பரை அலகுகளை மாத்திரமே Y நிறமூர்த்தங்கள் காவுகின்றன. Y - இணைந்த பரம்பரை அலகுகளின் மேல் காவப்படும் ஒரு சில ஒழுங்கீனங்கள், ஆண் தோன்றலினூடாக மாத்திரம் கடத்தப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றன.

உ.ம். Y - இணைந்த சில பரம்பரைகள், இல்லாமை, பொதுவான விந்துக்களை உற்பத்திபண்ணும் இயலாமையைத் தோற்றுவிக்கின்றது. இலிங்கம் சார்பான இயல்புகளுக்கு மேலதிகமாக X நிறமூர்த்தங்கள் தனிநபர் இலிங்கத்துவத்துக்குச் சார்பற்ற பல்வேறு இயல்புகளையும் காவுகின்றன.

உ.ம்.
சிவப்பு பச்சை நிறக்குருடு: சிவப்பு மற்றும் பச்சை நிறங்களுக்கிடையிலான வேறுபாடுகளைக் கண்டுணர்வதில் சிரமத்தை ஏற்படுத்தும் ஒரு X - இணைந்த பின்னிடைவான ஒழுங்கீனம்.

ஈமோபீலியா (haemophilia): குருதி உறைதலுக்குத் தேவைப்படும் ஒன்று அல்லது பல புரதங்கள் இல்லாத நிலைமையை ஏற்படுத்தும் ஒரு X - இணைந்த பின்னிடைவான ஒழுங்கீனம். குருதியுறைதலில் ஏற்படும் தாமதம் காரணமாக ஈமோபீலியாவைக் கொண்ட ஒரு நபர் காயங்களின் போது தீவிர குருதி வெளியேற்றத்தை எதிர் கொள்வார்.

பக்க அனுசரணை


தொடர்ச்சி...

## 'கிழக்கை மீட்போம்' ...

அவர்களால்தான் கிழக்கை மீட்க முடியும்.

எமது மண்ணில் பெண்கள் மீதும் குழந்தைகள் மீதும் நடத்தப்படுகின்ற பாலியல் வன்முறைகளின் களமாக எமது பிரதேசங்கள் மாறிவருகின்றன. பண்பாடு குடும்ப கௌரவம் என்கின்ற போர்வையில் இவையெல்லாம் அடக்கி வாசிக்கப்படுவதும் மறைக்கப்படுவதும் நடந்தேறுகின்றது. வேதனைக்குரிய இந்த நிலைமைகளை எப்படியும் மாற்றியாகவேண்டும் என்கின்ற அக்கறை கொண்ட மனிதர்கள் அதிகார பீடங்களை நோக்கி மேலெழ வேண்டும் அதுவே கிழக்கு மீட்சிக்கு வழிகாட்டும்.

போட்டி போட்டுக்கொண்டு ஆலயங்களை கட்டுகின்றோம் என்று வானளாவிய கோயிற் கோபுரங்கள் மூலை முடுக்குகளிலேயெல்லாம் எழுந்து நிற்கின்றன. ஒவ்வொரு தமிழ் கிராமங்களின் உழைப்பும் வருடாவருடம் கோவில் திருவிழாக்களில் கொட்டி கரியாக்கப்படுகின்றன. போதாமைக்கு வெளிநாடு வாழ் தமிழர்கள் தங்கள் குடிப்பெருமை, குலப்பெருமைகளை தூக்கி நிறுத்துவதற்கு லட்ஷக்கணக்கில் கோவில்களின் அலங்காரங்களை அதிகரித்துக்கொண்டே இருக்கின்றனர். அனைத்துக்கும் மேலாக எமது எம்பிமாரின் மிகப்பெரிய சாதனைகள் கோயிலுக்கு கோடிக்கணக்கில் நிதி ஒதுக்குவது என்பதாக மாறிவருகின்றது.

'உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பே ஆலயம்' என்கிறார் திருமூலர். 'வெள்ளைநிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது' என்றார் விபுலானந்தர். எனவே கோயில்களை நோக்கி கொட்டப்படும் கோடிக்கணக்கான நிதிகள் அனைத்தும் விரயமானவை. இந்த நிதிவளங்களை அபிவிருத்தி நோக்கிச் செலுத்துவோம், சமூகநல மேம்பாடும் வாழ்வியலில் சமத்துவமும் நோக்கிச் செலவு செய்வோம் என்று சிந்திக்க தெரிந்த தலைவர்களாலேயே கிழக்கு விடுதலையாகும். காலையில் எழுந்து பள்ளிக்கு செல்லமுன்னர் ஒரு பாண்துண்டு வாங்க முடியாத குழந்தைகள் இன்னும் நமதூர்களில் உண்டு. ஒரு கனிஷ்ட பாடசாலைக்காக பல கிலோ மீற்றர்கள் நடந்து செல்லவேண்டிய நிலையில் சில குக்கிராமத்து மாணவர்கள் இன்றும் கிழக்கில் இருக்கின்றார்கள். ஒழுங்கான உடையணிந்து, அலங்கரித்து அறியாத சிறுவர் சிறுமியர் இன்னும் எம்மிடையேதான் வாழ்கின்றனர். குடிநீர் இன்றி பிளாஸ்டிக் குடங்களுடன் அலையும் கிராமங்கள் இந்தியாபோல் இங்கும் அதிகரித்து வருகின்றன. இவையெல்லாம் தீர்க்கப்படாமல் நமது இனம் தலை நிமிர்ந்து வாழ முடியாது என்று வீறு கொண்டெழுகின்ற தலைவர்களாலேயேதான் கிழக்கை விடுவிக்க முடியும். அத்தனைக்கும் மேலாக கிழக்கு என்பது தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர், பறங்கியர் என்கின்ற பல்லினங்களின் சொத்தாகும். இங்கே யாரும் ஓரினத்துக்கு தலைவராக இருந்து கொண்டு கிழக்கின் தலைவராக முடியாது. ஆனால் துரதிஷ்ட வசமாக இப்போதெல்லாம் எம்மிடமிருப்பது இனத்தலைவர்களும் ஊர்த்தலைவர்களும் மட்டுமேயாகும். இந்நிலை மாற்றப்பட்டு சக இன மக்களாலும் போற்றப்படத்தக்க தலைவர்கள் உருவாக வேண்டும். ஒரு நல்லையாமாஸ்ட்டர் போல, ஒரு தேவநாயகம் போல ஒரு இராஜதுரை போல, கிழக்கை மீட்க பெருந்தலைவர்களே தேவை. எவரொருவர் எல்லா இனங்களையும் அரவணைத்து ஆட்சி செய்யும் வல்லமையை பெறுகின்றாரோ, எவரொருவரால் இனங்கள் என்கின்ற குச்சி வேலிகளைத்தாண்டி கிழக்கில் வாழும் ஒவ்வொரு குடிமகனிடத்திலும் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் சம்பாதிக்க முடிகின்றதோ அவராலேயே கிழக்கை முழுமையாக மீட்க முடியும். அதுமட்டுமல்ல மறைந்து போன மட்டக்களப்பு பொன்னுத்துரை என்கின்ற எழுத்தாளன் சொல்வான் 'ஒரு தேசப்பற்று மிக்க அரசியல்வாதி கிடைத்தால் உலகப் புகழ் மிக்க நகரங்களில் ஒன்றான வெனிஸ் நகருக்கு நிகராக மட்டக்களப்பு எழுந்து நிற்க முடியு'மென்று.

ஆம், அப்போதுதான் கிழக்கின் விடுதலை சாத்தியமாகும்.

தொடர்ச்சி...

## உயர் நியமன ...

விவகாரத்தில் தவறு செய்துவிட்டதாகவே நினைக்கத்தோன்றுகிறது.

சவேந்திர சில்வா தவறு செய்ததாக எங்கும் இதுவரை உறுதி செய்யப்படவில்லை. குற்றச்சாட்டு மாத்திரந்தான் இருக்கிறது. அப்படியிருக்க குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில் அவரை ஒதுக்குவது சரியல்ல என்று சிலர் வாதிடலாம். உண்மைதான் குற்றம் நிரூபிக்கப்படாதவரை ஒருவர் நிரபராதிதான். ஆனால், ஒரு நாட்டின் முக்கிய அரச பதவிக்கான நியமனத்தில் ஒரு தனி நபரின் நலனைவிட நாட்டின் நலனை, பாதிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் உணர்வுகளை கருத்தில் கொண்டாக வேண்டும். அந்த வகையில் பார்க்கும் போது, இது இலங்கைக்கும் அந்த நாட்டின் குறைந்தபட்சம் சிறுபான்மையான தமிழ் மக்களுக்கும் பாதகமான அம்சமாகவே பார்க்கப்படுகின்றது. ஆகவே இந்த நியமனத்தில் ஒன்றுக்கு இரண்டு தடவை ஆராயப்பட்டிருக்க வேண்டும்.

அதுவும் அடுத்ததாக ஒரு ஜனாதிபதிக்கான தேர்தல் வரவிருக்கும் நிலையில் இப்படியான நியமனங்களின் போது ஜனாதிபதி மிகுந்த கவனத்துடன் இருந்திருக்க வேண்டும். ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடையப் போகின்றதுதான், ஆனால், தமிழ் மக்கள் மாத்திரமல்ல ஒட்டுமொத்த இலங்கை மக்களும் மீண்டும் ஒரு தடவை தோற்றிருக்கிறார்கள்.

தொடர்ச்சி...

## இமாலய சாதனை....

உயர்ந்த கருத்துக்களை உண்மைப் பொருட்களை தமதாக்கி வாழ்க்கையில் கடைப்பிடிப்பதே அறிவு. தமிழகம் ஒரு காலத்தில் அந்நிலையிலேதான் விளங்கியது. அறிவுக்கு வணக்கம் செலுத்தி அறிவே கடவுள் எனத்தமிழன் அன்று வழிபட்டு வீரவாழ்வு வாழ்ந்தான். அந்த சிறந்த நிலை ஆங்கிலக் கல்லூரிகளிலே பயிலும் உங்களிடம் காணப்படுவதை அறிந்து பெருமகிழ்வு அடைகிறேன்.

நான் படித்த மத்திய கல்லூரியில் மாணவர்கள் அடிக்கடி என்னை பேசுக்கு அழைப்பார்கள். அப்போதெல்லாம் அதிபர் ஏதாவது ஒரு குறிக்கப்பட்டவற்றை மட்டும் தான் பேச வேண்டும். அரசியல் பேசக் கூடாது என்றெல்லாம் நிபந்தனைகள் போடுவதுண்டு. அதற்கு காரணம் இல்லாமல் இல்லை. பாடசாலை நாட்களில் விளங்காதவற்றை சந்தேகம் தீரும்வரை விளங்கிக் கொள்வதில் ஆர்வம் அதிகம் உடையவன். பள்ளிப் பருவத்திலேயே பகிரங்கக் கூட்டங்கள், அரசியல் மேடைகள், சமூக மறுமலர்ச்சி கூட்டங்கள் ஆகியவற்றில் மிகத்தீவிரமாக ஈடுபட்டு வந்தேன். அது காரணமாக அதிபரால் பல தடவை எச்சரிக்கை செய்யப்பட்டுமிருக்கிறேன். அவற்றையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டுதான் அவர் சில பல நிபந்தனைகளை என்பேரில் விதிக்கிறாரென்றும் உணர்ந்தேன்.

மாணவப் பருவத்தின் விலை எமக்கு நன்றாகத் தெரியும். அதை மாசுபடுத்தும் நோக்கம் எமக்குக் கிடையாது. மாணவர்களின் சிந்தனையையும் செயலையும் பொறுத்திருக்கிறது. அவர்களின் எதிர்காலம். உங்கள் எதிர்காலம் நல்ல அஸ்திவாரத்தின் மேல் அமைக்கப்பட்டிருக்கின்றது. இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி எவரும் உங்களை எளிதில் ஏமாற்றிவிட முடியாதென்பதையும் உணர்கிறேன். ஆகவே எம்மைப்பற்றிப் பேசலாமென்றெண்ணுகிறேன். என்னைப் பற்றிப் பேசுவதானால் என்னைப் பெற்றெடுத்த தாயைப்பற்றி சிறிதளவாவது பேச வேண்டியிருக்கிறது.

என் தாயைப்பற்றி பேசுவதாயின் அவள் இந்த ஊரில் இன்ன பெயருள்ள தெருவிலே வாழ்ந்த இன்னாருக்கும் இன்னாருக்கும் மகளாகப் பிறந்தவள். அவள் இன்ன ஊரைச் சேர்ந்த இன்னாரைத் திருமணம் செய்து கொண்டாளென்று மட்டுமே சொல்ல முடியும். அவள் என்ன சரித்திரச் சிறப்பு வாய்ந்தவளா? நீங்களெல்லாம் தெரிந்திருக்க? அப்படியே இங்கு கூடியிருக்கும் உங்கள் ஒவ்வொருவருடைய தாய்மார்களைப் பற்றிப் பேசுவதாயின் ஒரு தலைமுறை அல்லது இரண்டு தலை முறையைச் சேர்ந்தவர்களை மட்டுமே எடுத்துப் பேச முடியும். (தொடரும்)

தொடர்ச்சி...

## ஜனாதிபதி ..

கூறியுள்ளார்.

இதேவேளை, கரு ஜயசூரியவே ஜனாதிபதி வேட்பாளரென ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் கட்சியின் மத்திய குழுவில் அறிவித்ததன் பிரகாரம், கம்பஹா மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரச்சாரங்களை கரு ஜயசூரிய ஆரம்பிக்கவுள்ளதாக அவருக்கு ஆதரவான உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது யார் என்பது தொடர்பாக கட்சியின் மத்திய குழுவில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தி வருகின்றனர்.

## குவைத்தில் இருந்து பணிப்பெண்கள் மீட்பு



குவைத் நாட்டில் தமது வீட்டு எஜமானர்களால் பல்வேறு வகையான துன்புறுத்தல்களுக்கு இலக்காகி வந்த இலங்கைப் பணிப்பெண்கள் 60 பேர் சொந்த நாட்டுக்கு திரும்பக் கொண்டுவரப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

நேற்று கட்டுநாயக்க விமானநிலையத்தில் இவர்கள் வந்து இறங்கினார்கள்.

வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகம் ஆகியவற்றின் தலையீடு காரணமாகவே இவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

தமக்கு ஒழுங்காக சம்பளம் வழங்கப்படவில்லை என்றும் தாம் தாக்கப்பட்டதாகவும் பல பணிப்பெண்கள் முறையிட்டுள்ளனர்.

தமது வீடுகளில் இருந்து வெளியேறி இலங்கை தூதரகத்தில் உள்ள புகலிடத்தில் தாம் தஞ்சமடைந்ததாக அந்தப் பெண்கள் கூறியுள்ளனர்.

தொடர்ச்சி...

## முக்கிய வழக்குகளின் அறிக்கை சட்ட மா அதிபரிடம்

திகதி பதில் பொலிஸ்மா அதிபருக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் குறித்த 6 சம்பவங்கள் தொடர்பான விசாரணை அறிக்கை, பதில் பொலிஸ் மா அதிபரால் சட்டமா அதிபரிடம் வியாழனன்று ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி...

## கொழும்பி.....

இந்த திட்டத்தின் வெற்றிக்கு அமைவாக வெள்ளவத்தையில் இருந்து பத்ரமுல்லை வரையிலும் மட்டக்குளியில் இருந்து ஹங்வெல்ல வரையிலும், மட்டக்குளியில் இருந்து நீர்கொழும்பு வரையிலும் பயணிகளுக்காக படகு பொக்குவரத்து சேவையை ஆரம்பிக்கக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

கொழும்பில் வாகன நெரிசலை கட்டுப்படுத்துவதற்கு மென்ரயில் திட்மொன்றும் ஆரம்பிப்பதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உயிர்த்த ஞாயிறில் உயிர் நீத்த எமது மக்களின் ஞாபகார்த்த நினைவுத்தூபி திறப்பு நிகழ்வு

இடம் : மட்டக்களப்பு புலையவெளி
காலம் : 26 / 08 / 2019 , திங்கட்கிழமை
நேரம் : மாலை 5 மணி
அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்.



பயங்கரவாதிகளினால், கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள், குழந்தைகள் ஆகியோரின் நினைவாக, அவர்கள் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுத்தூபி மட்டக்களப்பு புலையவெளியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

பல மதத்தலைவர்கள், சமூகப் பெரியார்கள் பிரமுகர்கள் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள்.



அறிவிப்பு
புலையவெளி
அன்னை ஸ்ரீ பேச்சியம்மன்
ஆலயம்.

(இது லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்தின் ஆதரவு மற்றும் நிதியுதவியில் மேற்கொள்ளப்படும் கிராம அபிவிருத்தித் திட்டம்.)

Printed at Express News Papers (Cey) Ltd and Published by Arangam News (Pvt)Ltd No 227 Bar Road Batticaloa